விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 07 செவ்வாய்க்கிழமை (21.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## சர்வமதக் குழு தமிழ்நாடு விஜயம்

12 பேரடங்கிய இலங்கையின் சர்வமத நல்லிணக்கக் குழுவொன்று அடுத்த மாதம் முதல் வாரத்தில் தமிழகத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

இலங்கைக்கும் தமிழகத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும் முகமாகவே இலங்கைக்குழு தமிழகம் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் இந்தக் குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமது பயணம் குறித்துப் பேச்சு நடத்தவுள்ளது.

அதேவேளை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர், கொழும்பு மறை மாவட்ட பேராயர் அதி.வணக்கத்துக்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆகியோரை இந்த நல்லிணக்கக்குழு அண்மையில் (20ஆம் பக்கம் பார்க்க)


# புலிகளின் வீழ்ச்சிக்குப் பின் சுதந்திரத்திற்கு இடமில்லை

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியுடன் யுத்தம் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும் இலங்கையில் அடிப்படை மனித உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் மரியாதை மேன்மேலும் குறைந்துகொண்டு போவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரனா?

## கேள்வி எழுப்புகிறார் இந். மத்திய அமைச்சர்





(சென்னை)

சுண்டைக்காய் சீமானை கைது செய்து 10 ஆண்டுகள் சிறையில் வைக்க வேண்டும் என்று இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

புதுவையில் ராஜீவ் நினைவு ஜோதி யாத்திரை வழியனுப்பு விழா நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் நாராயணசாமி கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் பேசியதாவது, புதுவை மக்கள் காங்கிரஸ் மீதும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மீதும மதிப்பும், மரியாதையும் வைத்துள்ளனர்.

ராஜீவ் காந்தி தான் பிரதமராக இருக்கையில் இந்தியாவை வல்லரசு நாடாக்க பாடுபட்டார். அவருடைய பதவி காலத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கூட்டமைப்புக் கட்சிகள் இம்மாத இறுதிக்குள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளும் இம மாத இறுதிக்குள் ஒன்றாகக் கூடி முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை கொழும்பில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ரெலோவுக்குமிடையில் இரண்டாவது கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் மற்றைய 5 கட்சிகளும் ஒன்றாகச் சந்திக்கும் திகதி தொடர்பில் முடிபெடுக்கப்படும் என அறியமுடிகின்றது.

பெரும்பாலும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளும் இம்மாத இறுதிக்குள் ஒன்றாகச் சந்தித்து முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளன என நம்பப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில 5 கட்சி (20ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு முகாம் மூடப்பட்டது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ், மன்னார், மருதமடு பிரதேசத்தில இயங்கி வந்த முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு முகாம் கடந்த 17-ம் திகதியுடன் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், புனர்வாழ்வுக்காக எஞ்சியுள்ள 340 முன்னாள்போராளி கள், வவுனியா- (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.ம.முவின் உப தலைவர் மீது விசாரணை

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உபதலைவர் மற்றும் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் நேற்று வவுனியா பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி வவுனியாவில் முள்ளிவாய்கால் நினைவு தினம் அனுஷ்டித்தமை தொடர்பாகவே அக் கட்சியின் உப தலைவரான சிவபாதம் கஜேந்திரகுமார் மற்றும் வவுனியா மாவட்ட அமைப்பாளரான கிருஸ்ணகோபால் வசந்தரூபன் (20ஆம் பக்கம் பார்க்க)

## காணி சுவீகரிப்பு வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

யாழ்.வலிகாமம் பிரதேசத்தில் மக்களுக்குச் சொந்தமான 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணியை அரசாங்கம் அநீதியான முறையில் சுவீகரிப்பதற்கு முயற்சிப்பதாக தெரிவித்து ஆயிரத்து 474 பேர் தாக்கல் செய்துள்ள மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் எஸ்.சிறிஸ்கந்தராஜா முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக கொள்ளப்பட்டது.

இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் மிகவும் அத்தியாவசிய தேவைக்காக எனத் தெரிவித்து காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38ஆவது சரத்திற்கு அமைய துரிதமாக அந்தக் காணியை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட நிலைமை என்பதால் அதனை மனுவில் உள்ளடக்க முடியாமற் போயுள்ளதாக சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அந்த விடயத்தையும் உள்ளடக்கி மனுவில் திருத்தம் மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ள நிவாரணங்களை வழங்குமாறும் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய நீதிமன்றம், மனுவில் திருத்தம் மேற்கொண்டு அதனை இம்மாதம் 27 -ம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளது. (எ-11)

## சீரற்ற காலநிலை நீடிக்கும்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக இலங்கையின் பலபாகங்களிலும் கடும் மழை பெய்யக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அத்துடன் இந்த சீரற்ற காலநிலை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்றும் எதிர்வு கூறியுள்ளது.

மழை காரணமாக மேல், தென், சப்ரகமுவ, (20ஆம் பக்கம் பார்க்க)




யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா!

நல்லூரில் 23, 24, 25 வியாழன், வெள்ளி, சனி - காலை நாவலர் கலாசார மண்டபம்
மாலை ஸ்ரீ துர்காதேவி மணிமண்டபம்
தென்மராட்சியில் 26 ஞாயிறு காலை - மாலை சாவகச்சேரி, இந்துக் கல்லூரி மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.






யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தினர்
தென்மராட்சி இலக்கிய அணியினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி சுவீகரிப்பை தடுக்குமாறு இ.போ.ச. ஊழியர் நாமலுக்கு கடிதம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான காணியினை அரசாங்க அதிபா குழுவினர் சுவீகரிக்க முயற்சிப்பதாகவும் இதனை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு, இலங்கை போக்குவரத்து சபை கிளிநொச்சி சாலை ஊழியர்கள் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கை போக்கு வரத்து சபைக்கு சொந்தமான 12 ஏக்கர் காணியில், முதற்கட்டமாக வனவள திணைக்களத்திற்கும், சிறுவர் பூங்காவிற்கும், இராணுவத்தினரின் புனித பூமிக்குமாக எமது காணி சுவீகரிக்கப்பட்டது.

அத்துடன், இரண்டாம் கட்டமாக தெற்குப் பகுதியில் தனிநபரால் மூன்று வீடுகள் கட்டப்பட்டு அபகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரச அதிபரினால் அப்பகுதியும் எமக்கு மீட்டுத் தரப்பட வில்லை.

அடுத்த மூன்றாம் கட்டமாக கிளிநொச்சி சாலைக்கு எதிரில், தற்போது பொதுச் சந்தை காணப்படும் காணியானது இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் தங்குமிடத்துக்குரிய ஏறத்தாழ 5 ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டது. அத்துடன், அரசாங்க அதிபர் தலைமையில், ஏறத்தாழ 10 ஏக்கர் காணி எஞ்சியுள்ளது.

யுத்தம் முடிபடைந்து 4 வருட காலப்பகுதியில் புதிதாக ஆரம்பிக்கும் எமது கிளிநொச்சிசாலைக்கு அரசாங்க அதிபரினால் எதுவித உதவியும், கிளிநொச்சி சாலைக்கும், வெளிமாவட்ட ஊழியர்களுக்கும் செய்து தரப்படவில்லை. ஆனால், அரச அதிபர் எமக்கு செய்த உதவி ஒன்று எமது காணி அபகரிப்புத் தான்.


ஆனால், ஜனாதிபதியின் கிளிநொச்சி வருகையின் போது, கிளிநொச்சி சாலைக்குரிய காணி யில், பஸ் நிலையமும், எரிபொருள் நிரப்பு நிலையமும் மற்றும் அலுவலகக் கட்டடமும் ஊழியர்களின் ஓய்வு அறையும், பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை சேவையும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களின் அன்றாட அவசிய தேவைக்காக 10 புதிய பஸ் கொள்வனவு செய்து கொடுக்கும்படியும் அரசாங்க அதிபர் கூட்டத்தில் கூறி இருந்தார்.

அத்துடன், அரசதிணைக்களங்களை அபகரித்தல், ஆக்கிரமித்தல், வேறு தேவைக்கு விட்டுக் கொடுத்தல் போன்றன இடம்பெறாமல் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் தற்போது, இலங்கை போக்குவரத்து சபை கிளிநொச்சி சாலைக்கு சொந்தமான காணி அரச அதிகாரிகளினால் அபகரிப்புதான் நடைபெற்று வருகின்றதாகவும் அந்த கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ-11)

# நல்லிணக்கத்துக்கு அரசு தயாரில்லை

## கருணாரட்ன சாடல்



(கொழும்பு)

யுத்த வெற்றியின் நான்காண்டு நிறைவை அரசு கொண்டாடியுள்ளது. இனவாதத்தை ஊக்குவிக் கும் இந்த அரசுக்கு எவர் வீரர் என்பது தெரியவில்லை. யுத்தத்தில் இறந்த, உடல் அவயவங்களை இழந்த இராணுவத்தினர் குறித்து அரசு பேசவில்லை. மறுபக்கத்தில் யுத்தத்தில் இறந்த தமிழர்கள் பற்றியும் அது பேசவில்லை.

தமது இறந்த உறவுகளை நினைவுகூரும் உரிமை வடக்கு மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் தாம் ஒரு போதும் தயாரில்லை என அரசு இதனூடாக மறுபடியும் எடுத்துக் காட்டியுள்ளது என கலாநிதி விக்கிரம பாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பொது எதிர்க் கட்சிகள் சார்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரவித்தார். இது தொடர்பல் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த வெற்றி வழாவை அரசு பெருமெடுப்புடன் கொண்டாடியது. ஆனால் வடக்கு மக்கள் தமது இறந்த உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலிசெலுத்தியதை அரசு தடுத்து நிறுத்தியுள்ளது.

யுத்தத்தில் இறந்த தமது உறவுகளுக்கு வடக்கு மக்கள அஞ்சலி செலுத்தனா. மனவேதனையுடன் அஞ்சலி செலுத்திய அவர்கள் கைது செய்யப்பட்டனா. இதனூடாக நல்லிணக்கம் என்பது பொய் என்பதை அரசு எடுத்துக் காட்டியுள்ளது எனத் தெரிவித்தார். (எ-11)





## Excavator (பெக்கோ) வாடகைக்கு வழங்கல்

பனை வடலிகளை மீள்நடுகை செய்தல் மற்றும் இதர விவசாயம் தொடர்பான வேலைகளை நிறைவேற்றுவதற்கு, மணித்தியால அடிப்படையில் மேற்படி இயந்திரம் வாடகைக்கு விடப்படும்.

**பசுபதி சீவரத்தினம்,**
பனை அபிவிருத்திச் சபை
(பனை ஆராய்ச்சி நிறுவனம்)
கண்டி வீதி,
கைதடி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
021 2057065, 021 2057067

(ஶ்ரீ-3383)


## கஜேந்திரன் மீது 6 மணி நேர விசாரணை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் யாழ்.இளைஞர் அமைபபின் தலைவர் இன்னாசிமுத்து சத்தியசீலன் ஆகிய இருவரையும் நேற்று மதியம் 2 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை பயஙகரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தியுள்ளனர்.

மன்னாரில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவுக் கூட்டத்தில் தமிழினப் படுகொலைகள் எழுதப்பட்ட பதாகை வைத்திருந்தமை மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் படங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக கடந்த 18-ம் திகதி செல்வராசா கஜேந் திரன் உட்பட 15 பேர் கைது செய்யப்பட்டு நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (எ-6)


# வன்னிவிளாங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன ஆலய வருடாந்த பொங்கல் விழா - 2013

**24.05.2013 வெள்ளிக்கிழமை**

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.*

அம்பிகை அடியார்களே!

வன்னிவிளாங்குளம் பகுதியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 24.05.2013 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிசேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 09 மணியளவில் மடைபண்டம் எடுக்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து பொங்கல் நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிசேக பொருட்கள் பூக்கள், மாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு வேண்டுகின்றோம். வழமைபோல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். எனவே அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு:-

1.பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

2.பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

3.பொங்கல் தினத்தன்று வியாபார நிலையம் அமைக்க விரும்புவோர் 22.05.2013 மு.ப. 11.00 மணி தொடக்கம் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்பதை அறியத் தருகின்றோம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
"சுபம்"

இங்ஙனம்
**ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச்சபை,**
வன்னிவிளாங்குளம்,
மாங்குளம். (ஶ்ரீ-3385)


## கார் மோதி குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 8.20 மணியளவில் கோப்பாய் கந்தசாமி கோவில் அருகே இடம் பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் வடக்கினை சேர்ந்த எ.பரமலிங்கம் (வயது 52) என்பவரே படுகாயமடைந்த நிலை யில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கூலி வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டு இருக்கும் போது இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த கார் மோதி விட்டு தப்பிச் சென்று விட்டதாக விபத்து நடந்த இடத்தில் நின்ற பொது மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ-11,85)


# விண்ணப்பம் கோரல

மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு விடுதி முகாமையாளர்களாகப் பணியாற்ற ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமைகள்

1.க.பொ.த.உயர்தரம் குறைந்தது தேவை
2.வயதெல்லை 45 வருடங்களுக்கு மேல் ஓய்வுநிலையிலுள்ள தேக ஆரோக்கியம் உள்ள அதிபர், ஆசிரிய ஆசிரியைகள் பெரிதும் விரும்பத்தக்கது.
3.விடுதியிலிருந்து தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்.
4.நாளாந்தம் வந்து போகமுடியாது.
5.தகுதி அனுபவம் என்பவற்றுக்கேற்ப நியாயமான சம்பளம் நேரில் பேசி வழங்கப்படும்.
6.விண்ணப்பங்கள் 28.05.2013 12.00 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் விளம்பரதாரரது விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 28.05.2013 12.00 மணியாகும். முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரிகள் 2 மணிக்கு சகல அனுபவ நற்சான்றிதழ்கள் கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு : தி.இராசநாயகம்
தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி
தொலைபேசி இலக்கம்: 077-0604950, 021-4923118

(ஶ்ரீ-33384)


# அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)**
**வட்டாரம்:-14**
**ஆதன இலக்கம்:40/36**
**சண்டிலிப்பாய் கீரிமலை வீதி.**

வட்டாரம் 14 சண்டிலிப்பாய் கீரிமலை வீதி, ஆதன இலக்கம் 40/36 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி சண்டிலிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை "புத்தம்புலோ தெற்கும் சுடுகாட்டுப்பிட்டியும்" எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 09 குளி 10.33 கொண்ட ஆதனம்) இவ்வாதனமானது மடத்தடி சண்டிலிப்பாயைச் சேர்ந்த வெவ்வந்திநாதன் கைம்பெண் வசந்தமலர், செல்லத்துரை ஜெயக்குமார் இவர்களினால் அறுதி உறுதி மூலம் செல்லத்துரை அரசகுமாரன் பெண் மேரி கொண்செப்ரா என்பவர்களுக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 14889 ஆம் இலக்க 06.03.2013 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப் படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதி வேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய் துள்ளார்.

இவ் 'புத்தம்புலோ தெற்கும் சுடுகாட்டுப்பிட்டியும்' நிலப்பரப்பு 09 குளி 10.33 இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் அரசகுமாரன் பெண் மேரி கொண்செப்ரா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(2699) தவிசாளர், வலி தென்மேற்கு பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அன்புக்கு எல்லை இல்லை

ஓர் ஊரிலே பெரியவர் ஒருவர் இருந்தார். அந்த ஊருக்கு வெளியில் ஒரு காடு இருந்தது. அந்த காட்டில் ஓர் ஆச்சிரமம் ஒன்றை கட்டி அதிலே அவர் வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் நடு இரவில் அவ்வாச்சிரமத்தில் அவர் தூங்கிக் கொண்டிருந்த போது, யாரோ கதவை தட்டும் சத்தம் அவர் காதில் ஒலித்தது.

உடனே அவர் எழுந்து சென்று கதவை திறந்து பார்த்தார். ஓர் இளைஞன் அவர் முன்னால் நின்று கொண்டிருந்தான். அவனது முகத்தைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.

"தம்பி... யார் நீ?... என்ன வேண்டும் உனக்கு... எப்படி இந்த நேரத்தில் இங்கே வந்தாய்? "என்று கேட்டார்.

"சுவாமி... நான் ஒரு வழிப்போக்கன்... இந்த வழியாக வந்து கொண்டிருந்த வேளையில் இருட்டிப் போய் விட்டது. நான் ஊருக்குப் புதியவன். அதுதான் எங்கே போகிறது என்று தெரியாமல் இங்கே நுழைந்தேன். இன்றிரவு மட்டும் தங்குவதற்கு இடம் தந்தால் பேருபகாரமாக இருக்கும். இந்த இரவு வேளையில் ஆசிரமம் தான் என் கண்ணுக்கு தென்பட்டது. அதனால்தான் கதவைத் தட்டினேன். உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான்.

அவர் இவன் முகத்தைப் பார்த்தார். பாவமாக இருந்தது. "தம்பி! நீ வேறு எங்கேயும் போக வேண்டாம். இங்கே இன்றிரவைக் கழித்துக் கொள்ளலாம்" என்றார்.

அதன்பின் உள்ளே அழைத்தார். "அது சரி... உன்முகம் மிகவும் வாடிப்போய் இருக்கிறதே... நீ இன்னும் எதையும் சாப்பிடவில்லையா?"என்றார்.

"ஆமாம்!" என்று அவன் தலையசைத்தான். உடனே அந்த நேரத்தில் அவரால் முடிந்தளவு ஏதோ உணவு தயாரித்து அவனது பசியை நீக்கினார்.

அதன் பின்னர் அவனுக்கு படுக்கை வசதி செய்து கொடுத்தார். அவன் நிம்மதியாக தூங்கினான்.

காலையில் எழுந்தவுடன் மறுபடியும் அவனுக்கு உணவு தயாரித்துக் கொடுத்தார். அவன் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டான்.

அவ்வேளையில் அவர் கேட்டார்" தம்பி நீ எந்த ஊர்? எதற்காக இந்தப் பக்கம் வந்தாய்? என்ன தொழில் செய்கிறாய்?" என்று அடி மேல் அடி கேள்வி எழுப்பினார்.

"சுவாமி... நீங்கள் மிகவும் நல்லவர். உங்களிடம் பொய் கூறுவது பிழை" என்றான்.

"சரி... சொல்லு!" என்றார் அந்தப் பெரியவர்.

"நான் ஒரு திருடன்... நேற்று இரவு, அயல் கிராமத்திலுள்ள வீடொன்றினுள் நுழைந்து திருடி விட்டு இந்த வழியாக வந்தேன். வரும் வழியில் சில காவலர்கள் என்னைத் துரத்தினார்கள். அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே இந்த ஆச்சிரமத்தினுள் நுழைந்தேன். ஐயா! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்..." இப்படிச் சொல்லி விட்டு அவன் சென்று விட்டான். இதைக் கேட்ட பெரியவர் திகைத்துப் போனார்.

"எவ்வளவு பெரிய பாவம் செய்திருக்கிறோம்... இந்த ஆச்சிரமம் எவ்வளவு புனிதமான இடம். இதில் ஒரு திருடன் தங்கிவிட்டுப் போயிருக்கிறான். அதற்கு நான் காரணமாகி இருக்கிறேன். இந்த பாவத்தை எங்கே போய் கழுவ முடியும்!" என்றார். இப்படி எண்ணி எண்ணி அவர் மிகவும் கவலைப்பட ஆரம்பித்து விட்டார்.

உடனே இறைவன் சந்நிதி முன்சென்றார்.

"கடவுளே! ஒரு திருடனுக்கு போய் அடைக்கலம் கொடுத்து விட்டேன். அது மட்டுமல்ல... உணவளித்துள்ளேன். இப்படிப்பட்ட ஒரு இழிவு நிலைக்கு என்னை ஆளாக்கி விட்டாயே... இந்த பாவத்தை நான் எந்த புனித நதியில் போய் கழுவுவேன்" என்று மனம் வருந்தினார்.

இறைவனிடமிருந்து உடனே அவருக்குப் பதில் கிடைத்தது.

"இதோ பார்! அந்தத் திருடனை ஒரு நாள் உன்னோடு ஆச்சிரமத்தில் தங்கவைத்து இரண்டு வேளை உணவளித்ததற்கு இப்படிப் புலம்புகிறாய். அவனுக்கு முப்பது வயதாகிறது. முப்பது வருடங்களாக அவனை நான் இந்த பூமியில் வாழ வைத்து மூன்று வேளையும் உணவு கொடுத்து பராமரித்துக் காப்பாற்றி வந்திருக்கிறேன். இந்த பாவத்தை எங்கே போய் கழுவுவது?" என்றார்.

இறைவனின் இந்த வார்த்தைகள் அவரது காதினுள் விழுந்ததும் அவருக்கு விழிப்புணர்வு கிடைத்தது!

அன்புக்கும் கருணைக்கும் எல்லையே இல்லை என்பதை அவர் புரிந்து விட்டார்.

எல்லா எல்லைகளையும் கடந்து போய் உதவி செய்கிறது என்ற பண்பு என்பதற்குப் பெயர்தான் அன்பு ஆகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிராமங்களில் சிறுவர் கழகங்கள் முறையாக இயங்கவில்லை

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுவர் கழகம்,சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டு என்பன யாழ். மாவட்டத்தில் முறையாக செயற்பட வில்லை என பெற்றோர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அதேவேளை இதன் காரணமாகவே சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்து செல்கின்றன எனவும் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் இந்த சிறுவர் கழகங்களும் சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டுக்குழுவும் உருவாக்கப்பட்டுள்ளன.

அத்தோடு சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு கண்டு சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், சிறுவர் கழகங்களும் சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டுக் குழுக்களும் யாழ். மாவட்டத்தில் முறையாக செயற்படவில்லை. அதனைக் கண்காணிக்க வேண்டிய சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் உள்ளனர் எனவும் பெற்றோர் தரப்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டபோது, சிறுவர்கள் பாலியல் ரீதியாகவும் ஏனைய நடவடிக்கைகள் ஊடாகவும் பாதிப்புக்களுக்கு உள்ளாகும் போது, சட்ட ரீதியான நடவடிக்கைகளை எமது திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

பாதிப்புக்களுக்கு உள்ளாகும் சிறுவர்கள் மேலும் பாதிப்புக்கு உள்ளாகாமல் தடுக்கும் நடவடிக்கையில் எமது திணைக்களம் கூடிய கவனம் எடுத்து செயற்பட்டு வருகின்றது.

கிராம மட்டத்தில் இயங்கும் சிறுவர் கழகங்களையும் சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டுக் குழுக்களையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு கிராம அலுவலரையும் பிரதேச , மாவட்ட மட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களையுமே சாரும்.

அத்தோடு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு ஒவ்வொரு மாதமும் கூட்டப்பட வேண்டும். தவறின் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்பட வேண்டும். இது மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெறும் எனவும் தெரிவித்ததோடு யாழ். மாவட்டம் உட்பட வடக்கில் உள்ள ஏனைய சில மாவட்டங்களிலும் சிறுவர் கழகங்களும் சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டு குழுக்களும் உரிய முறையில் இயங்கவில்லை எனவும் வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுமியர்கள்மீதான பாலியல் வன்புணர்வுக் கொடூரங்கள் ஊடாக நிரூபணமாகியுள்ளன எனவும் தெரிவித்த வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள அதிகாரிகள், சிறுவர் கழகங்கள், சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டுக் குழுக்களை உரிய முறையில் இயங்க வைப்பது தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 120 | 120 |
| தக்காளி | 140 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 90 | 120 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 140-180 | 120-160 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 60 | 110 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | -- | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 | 140 |
| பீற்றூட் | -- | 70 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 600 | 400 |
| போஞ்சி | -- | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 60 | -- |
| கீரை - 1 பிடி | -- | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | -- | 60 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | -- | 40-50 | 45-50 | 40-45 |
| இராசவள்ளி | -- | 100 | 120 | 120 |

# இராசி பலன்

**21.05.2013**
**(சித்திரை 07,செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**
**ஏகாதசி பிற்பகல் 5.34 மணிவரை**
**அத்தம் பின்னிரவு 2.02 மணிவரை**
**இராகுகாலம் 2.52-4.22 மணிவரை**
**சுபநேரம் 10.22-11.52 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியம் சீராகும், கௌரவமான நாள், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர்.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவெடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மிதுனம்** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படலாம், பெற்றோர் வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், பிறரின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** ஆன்றோர் சந்திப்புண்டு, தொழில் வளம் பெருக தொல்லை தந்தவர்கள் உதவுவர், சகோதர ஒற்றுமை மேலோங்கும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்** பொருளாதார வளர்ச்சி கூடும், சுற்றத்தார் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** பெரிய மனிதர்களின் தொடர்பால் விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், உடல் நலம் சீராகும், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம்:

**துலாம்** தொழிலில் புதிய மாற்றங்களை செய்ய நினைப்பீர்கள், நாணயத்தோடு நடந்து கொள்வதால் அனைவரும் உங்களை பாராட்டுவார்கள், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**விருச்சிகம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், போசன நன்மையுண்டு.

**தனுசு** தனவரவுகள் திருப்திகரமாக இருக்கும், சொல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், முயற்சிகள் கைகூடும், பிறர் உதவியுண்டு.

**மகரம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், தொழிலை விரிவுபடுத்த எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் நன்மையுண்டு.

**கும்பம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரிக்கும், எதிலும் விட்டுக் கொடுத்து செல்வதால் அமைதி கூடும், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், செல்வாக்கு மேலோங்கும், நண்பர்களும் உறவினர்களும் வலிய வந்து உதவ முன்வருவர், கனவு பலிதமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் தேவையற்று நடமாடினால் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் இரவு வேளைகளில் காரணமின்றி நடமாடும் இளைஞர்களை கைது செய்வோம் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நெல்லியடி பகுதியில் மாலை 6 மணிக்குப் பின்னர் வீதிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் என்பவற்றுக்கு முன்னால் இரண்டு இளைஞர்களுக்கு மேல் தரித்து நின்றால் உடனடியாக அவர்கள் கைது செய்யப்படுவர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இச் செயற்பாடானது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கையானது நேற்று திங்கட் கிழமையில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பொலிசாரால் கைது செய்யப்படும் இளைஞர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-60)



நன்றி: மிரர்

## யோகாசன பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யோகாசனமும் தளர்வு பயிற்சிகளுக்குமான புதிய வகுப்புக்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.15 இற்கு நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சி நெறிகள் தொடர்ந்து சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6.15 தொடக்கம் 7.15 வரை நடைபெறும் என பயிற்சி ஆசிரியர் அறிவித்துள்ளார். (அ)




## இந்திய மீனவர்கள் 26 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 26 பேரும் நேற்று முற்பகல் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் உதவித் துணைத்தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மேற்படி 26 இந்திய மீனவர்களும் 5 படகுகளில் தொழில் நிமிர்த்தம் தமது கடல் எல்லையை தாண்டி வந்தபோது இலங்கை கடற்படையினரால் கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 26 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஊர்காவற்றுறை பதில் நீதவான் எஸ்.சபேசன் முன்னிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது நீதவானின் உத்தரவின் பேரில் 26 இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 26 இந்திய மீனவர்களும் நாளை மறுதினம் 23 ஆம் திகதி தமது படகுகளின் மூலம் நாடு திரும்பவுள்ளனர் என உதவித்துணைத் தூதுவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## வதிவிட பயிற்சி முகாம்

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான காலை வேளை உடற்பயிற்சி தொடர்பான வதிவிடப்பயிற்சி முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி முகாம் தெரிவு செய்யப்பட்ட உடற்பயிற்சி ஆசிரியர்களுக் கும் மற்றும் வலயக் கல்வி திணைக்கள உடற் கல்விப்பாட ஆசிரிய ஆலோசகர்களுக்கும் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன் கிழமையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி முகாமில் கலந்து கொள்ளவிருக்கும் உடற்கல்விப்பாட ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்விப் பாட ஆசிரிய ஆலோசகர்களை பயிற்சிக்குரிய ஒழுங்குடன் உரிய நேரத்திற்கு வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-15)

## தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் கம்பன் விழா 26 ஆம் திகதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் கம்பன் விழா எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் காலை நிகழ்வுகளின் தொடக்கவுரையை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் அதிபர் க.அருந்தவபாலன் ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து **கம்பனின் கைபிடிப்போம்** எனும் நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு இலக்கியச் சுடர் த. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் **கம்பனின் கைபிடிப்போம்** என்ற கருத்தமர்வில் வே.உதயகுமார், பா. விக்னேஸ்வரன், லோ. துதிகரன், அ.வாசுதேவா, ஸ்ரீ.பிரசாந்தன், இ.றெங்கராஜா, இரா.மாது, இ.ஜெயராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடாதிபதி தி. வேல்நம்பி தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வுகளில் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தொடக்கவுரையாற்றவுள்ளார். ஆன்றோர் கௌரவிப்பு நிகழ்வில் சித்த மருத்துவர் வ.சின்னப்பு கௌரவிக்கப்படவுள்ளார்.

தொடர்ந்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெறும் இராமனின் தனித்துவம் பெரிதும் வெளிப்படுவது **நட்பிலேயே! பகையிலேயே! காதலிலேயே!** என்ற பட்டிமன்றத்தில் இரா.செல்வவடிவேல், த. நாகேஸ்வரன், த.இராமலிங்கம், இரா.மாது, ஸ்ரீ.பிரசாந்தன், தி.றெங்கராஜா ஆகியோர் விவாதிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வுகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி இலக்கிய அணியினர் கேட்டுள்ளனர். (அ-29)

## நெல்லியடியிலிருந்து மந்திகை வரை வீதி புனரமைக்கப்படவில்லை


(தும்பளை)

நெல்லியடி மாலுசந்தியில் இருந்து மந்திகை வரையான பிரதான வீதி சேதமடைந்துள்ளதாக அவ் வீதியால் பயணிக்கும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதி பருத்தித்துறையில் இருந்து யாழ் செல்லும் பிரதான வீதியாக அமைந்துள்ளது. இதனால் நாளாந்தம் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டே செல்ல வேண்டியுள்ளது.

இவ்வீதி நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக உள்ளமையால் மழை காலங்களில் இவற்றில் நீர் தேங்கி நிற்பதுடன் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

எனவே, இவ் வீதியை இத் துறை சார்ந்த அதிகாரிகளி டம் புனரமைத்துத் தரும்படி பொது மக்கள் மற்றும் பயணிகள் கோரிக்கை விடுக் கின்றனர். (அ-19)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சிரேஷ்ட பிரிவினருக்கான கணித நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் **விவேகம்** என்னும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதோடு மாகாண மட்டப்போட்டியில் பங்கு பற்றவுமுள்ளது. இந்நாடகத்தில் பங்கு கொண்ட மாணவர்களைப் படத்தில் காணலாம்.

(படம்; மல்லாகம் செய்தியாளர்.)

## இளைஞர்களிடையே மோதல்; ஒருவர் காயம்

(கரணவாய்)

இரு குழுக்களிடையே இடம் பெற்ற மோதலில் நெல்லியடி முடக்காட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் அல்வாய் நக்கீரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

அல்வாய் நக்கீரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த உதைபந்தாட்டப் போட்டியின் பின்னர் அங்கு நின்ற வதிரிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலருக்கும் நெல்லியடி முடக்காட்டைச் சேர்ந்த இளைஞர்கள் சிலருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இதில் முடக்காட்டைச் சேர்ந்த சுதன் வயது 27 என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறைப் பொலிசார் [illegible] மேற்கொண்டு வருகின்றனர். (அ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனப் பார்வை

# அம்மா...

## நம்மவரின் ஓர் அற்புத படைப்பு

கடந்த 12-ம் திகதி கொண்டாடப்பட்ட சர்வ தேச அன்னையர் தினத்தை முன்னிட்டு யாழ்ப் பாணக் கலைஞர்களால் உருவாக்கப் பட்ட "அம்மா..." எனும் பாடலும் அதனுடன் இணைந்த குறுங்கதையும் யூரியூப் இணை யத்தின் பார்வையாளர்கள் பலரையும் ஈர்த் துள்ளது.

வெளியாகி ஒரு வாரமேயான நிலையில் 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர் களால் பார்த்து ரசிக்கப்பட்டுள்ளது.

9 நிமிடங்கள் 15 விநாடிகளைக் கொண்ட



இந்த அம்மா பாடல் பல படிப்பினைகளைச் சொல்கிறது.

இடி முழங்கி மழை பொழிகிறது. இந்த சத்தத்தால் திடுக்கிட்டு எழும் குழந்தை வீறி ட்டு அழுகிறது. குழந்தையின் அழுகை கேட்டு அம்மா தூக்கத்தில் இருந்து பதறியவாறு எழும்புகிறாள். எழுந்தவள் ஜாம் போத்தல் விளக்கை ஒளிரவைத்தவாறு குழந்தையை ஆராரோ... பாட்டுச் சொல்லி தூங்கவைக்கி றாள். காலை விடிகிறது. காட்சிகள் தொடர் கிறது. இவ்வாறுதான் இப்பாடல் ஆரம்பிக்கிறது.

தாய் தன் பிள்ளைகளை பாசத்தோடு வளர்க் கிறாள். பிள்ளைகள் வளர்கிறார்கள். சந்தர்ப்ப வசத்தால் பிள்ளைகள் வெளிநாடு செல்ல வய தான தாய் இலங்கையிலேயே இருந்து விடுகிறாள்.

திடீரென ஒரு நாள் அம்மாவின் மரணச் செய்தி இடியாய் வருகிறது. அவர்கள் அழுது புலம்புகி றார்கள். ஒரு மகன் உடனேயே வந்து விடுகிறான்.

ஒருத்தன் வந்திட்டான். மற்றவ என்ன செய்யப் போகினமோ தெரியாது... உறவுக்கா ரர் ஒருவர் இன்னொருவருக்கு சொல் லும் காட்சியும்,



திடீரென வரமுடியாமல் போன பிள்ளைகள் மடிக் கணனி முன் ஸ்கைப்பில் பார்த்துக் கதறும் காட்சியும் இன்றைய எம் யதார்த்தங்கள்.

இப்பாடலில் வரும் காட்சிகள் அம்மா வின் நினைவுகளையும் தாண்டி எமது கடந்த கால நாட்டு நிலைமைகளை படம்பிடித்துக் காட்டு வனவாகவுள்ளன.

பனம் பழத்தால் அழுக்குத் துணி தோய்தல், டைனமோ சுற்றி வானொலி கேட்டல், மோட் டார் சைக்கிளுக்கு குழாய் செலுத்தி பெற்றோல் தடவி அதை இயங்கவைக்கும் காட்சிகள் என எம் கடந்த யுத்த கால வாழ்வு எம் இளம் சந்ததிக்கு செய்தியாகிறது.

சிறுவர்களின் கிட்டியடிப்பு, கிராமிய காட்சி கள் என இயற்கையான சூழலில் நேர்த்தியாக படமாக்கப்பட்டுள்ளன.

இப் படைப்பை நீங்கள் கண்டு ரசிக்க youtube இணையத்தில் jaffna amma song என அழுத்திக் காணலாம்.

இவ்வுருவாக்கத்தில் பங்குகொண்ட நடிகர்கள் அனைவருமே புதுமுகங்கள் என்று காட்டிக் கொள்ளாத அளவுக்கு நடித்துள்ளதை பாராட்டலாம்.

அம்மாவாக நடித்த கலைச்செல்வி, ஒளிப் பதிவு செய்த எஸ்.கௌரீசன், ஒலிப்பதிவு செய்த குருநகர் ஜேம்ஸ் ஸ்ரூடியோ சி சுதர் சன், படத் தொகுப்பைச் செய்த ஏ.றஜீகாந், பாடலைப் பாடிய நெடுந்தீவு யோகேஸ்வரன் மற்றும் தினேஸ் ஏகாம்பரம் போன்றோர் தங்கள் பணிகளை நேர்த்தியாகச் செய்துள் ளனர்.

பாடலை எழுதி, இசையமைத்து காணொ ளியை இயக்கி, திருப்பதி என்டரைமன்ட் எனும் தனது நிறுவனத்தின் மூலம் அம்மா வின் பெருமைகளை அகிலமெங்கும் அசை போட வைத்த தினேஸ் ஏகாம்பரம் ஈழச் சினிமாவின் நம்பிக்கை நட்சத்திரம்.

மொத்தத்தில் அம்மா ஓர் அற்புதமான நம்மவர்களின் படைப்பாக வெளிவந்துள்ளது.

# யுத்தத்தை நினைவுபடுத்தும் புகைப்பட கண்காட்சி ஆஸியில்

(சிட்னி)

அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நக ரில் நேற்று முன்தினம் தமிழர் யுத்த த்தின் கோரத்தை நினைவுபடுத் தும் புகைப்படக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இக்கண்காட்சியில் முள்ளிவாய்க் கால் பேரழிவின் இறுதிக்காலப்பகு தியில் எடுக்கப்பட்டு இதுவரை வெளி வராத புகைப்படங்களும் போரின் பின்னரான தமிழ் மக்களின் அவல வாழ்வை வெளிப்படுத்தும் புகைப் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இப்படங்கள் அனைத்தும் முள்ளி வாய்க்கால் காலப்பகுதி தொடக்கம் கடந்த ஆண்டின் இறுதிவரை தமிழர் தாயகத்தில் நடைபெற்ற யுத்தத்தின் சாட்சியங்களாக உள்ளன.

இக்கண்காட்சியின் முதலாவது தொடக் கவுரையை ஜனநாயக தொழிற்கட்சியைச் சேர்ந்த ஸ்ரீவ் கம்வெல் நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில், இப்படங்களைப் பார்க்கும் போது இலங்கையில் இறுதிப் போர்க்காலத்தில் நடத்த கொடுமைகள் துல்லியமாகத் தெரிகின்றன.

மனிதர்கள் அனைவருக்கும் அதிர்ச்சிய ளிக்கக் கூடிய இச்சாட்சியங்களை இவ்வ ளவு நாளும் அறியாமல் இருந்திருக்கின் றோம்.

மெல்பேர்ன் நகரின் முக்கியமான ஒரு பகுதியில் நடைபெறும் இக்கண்காட்சி எதிர் வரும் மே மாதம் 30 ஆம் திகதி வரை தொட ர்ந்து நடைபெறவுள்ளது.

இப்பகுதி வழியாக செல்லும் பல்லின மக்களும் இக்கண்காட்சியை பார்வையிட்ட துடன் தமிழர்கள் மீதான யுத்தம் பற்றிய விளக் கங்களைப் பெற்றுச் செல்கின்றனர். (அ-2)

# பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்திற்கான பொதுக்கூட் டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்தியசாலை மண் டபத்தில் சங்கத் தலைவர் ஜோ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-29)

# சவுதியிலுள்ள இலங்கையருக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்கள்

பொது மன்னிப்பின் பேரில் சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பவிருக்கும் இலங்கையருக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்களை வழங்க சவுதி அரேபியாவிலுள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு சவுதி அரசு பொது மன்னிப்பு வழங்கியதுடன் அவர்கள் அந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக சவுதி தொழில் அமைச்சு ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் ஜூலை 3 ஆம் திகதி வரையிலான மூன்று மாத கால அவகாசமும் வழங்கியுள்ளது.

இதன்படி சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பவிருக்கும் சுமார் முந்நூறு இலங்கை யருக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கு ரியாத் நகரிலுள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மேற்படி தூதரகம் அறிவித்துள்ளது. (அ)

## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)

*வட்டாரம் : 07 ஆதன இலக்கம்: 10 கூழாவடி ஒழுங்கை*

வட்டாரம்07 கூழாவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 10 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவில் பற்று ஆனைக்கோட்டை இறை கம்பன் சாட்டியும் மறுபிரிவும் என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 71/4 வீடும் கொண்ட ஆதனம்) இவ் ஆதனமானது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஞானசம்பந்தன் பெண் சுலோஜனா என்பவர்களால் நன்கொடை உறுதி மூலம் சிவபாலன் பெண் ஜெகரஞ்சனா ஆகிய இவர்களுக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.ந.விஸ்வலிங்கம் முகதாவில் நிறைவேறிய 4101 ஆம் இலக்க 06.02.2011 திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள். இக் கம்பன் சாட்டியும் மறுபிரிவும் நிலப்பரப்பு 2624 ஆம் இலக்க 21.01.1962 ஆம் திகதிய உறுதியில் நிலப்பரப்பு 5 1/4 சொரியலாய் உள்ளது. இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சிவபாலன் பெண் ஜெகரஞ்ஜனா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்
வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். (2892)

## அம்பாறையில் நான்கு துப்பாக்கிகள் மீட்பு

அம்பாறையில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நான்கு துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

மரத்தடியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் இத்துப்பாக்கிகள் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை யில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய் யப்ப டவில்லை.

சம்பவம் தொடர் பான மேலதிக விசார ணைகளை அம் பாறை பொலிஸார் மேற் கொண்டு வரு கின்றனர். (அ)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: பரணி 2
உயரம்: 5' 6"
கி.பா:9.5
தகைமை/தொழில்: EngineerUK
தொ.இ:B1833

பிறப்பு: 1979 றோ.க(V)
நட்சத்திரம்: பரணி 4
உயரம்:5' 6"
கி.பா:15
தகைமை/தொழில்:LLB, MA,Lawer& Lecturer
விவாகரத்தானவர்.
தொ.இ:B1835

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 1
உயரம்: 5' 7"
கி.பா:8.5
தகைமை/தொழில்:O/L, உழவு இயந்திர உரிமையாளர்
தொ.இ:B1836

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: திருவாதிரை 2
உயரம்:5' 10"
கி.பா: 65.5 செவ் 7 இல்
தகைமை/தொழில்: BSc, MBA, HRM, Assistant Manager,
சைவபோசனம்
தொ.இ:B1838

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து(V)
நட்சத்திரம்: மூலம் 1
உயரம்: 5' 6"
கி.பா:36 செவ் 7 இல்
தகைமை/தொழில்:O/L
தொ.இ:G1837


பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: அனுசம் 2
உயரம்: 5' 7"
கி.பா : 17.75
தகைமை/தொழில்: O/L, France.
தொ.இ:G1840

பிறப்பு: 1991 இந்து (V)
நட்சத்திரம்: திருவாதிரை 4
உயரம்: 5' 1"
கி.பா:21
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G1841

பிறப்பு: 1988 இந்து (KO)
நட்சத்திரம்:சுவாதி 2
உயரம்: 5' 3"
கி.பா:--
தகைமை/தொழில்: LLB,MA (following) UK.
தொ.இ:G1844

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா நெடுங்கேணி சேனப்பிலவில் 7 வயது சிறுமி பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டமையை கண்டித்து சிறுமிக்கு நீதி வழங்கக் கோரியும் குற்றவாளியை கைது செய்யுமாறும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தின் போது... (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதில்லை

## தனியார் பே.உ.சங்கம் தெரிவிப்பு

அகில இலங்கை பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட போதும் தாம் தமது முழுமையான சேவையை நடத்தி அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கமே இலங்கையின் மிகப் பெரிய சங்கமாகும். இந்தச் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமை அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது.

வெசாக் தினத்தை முன்னிட்டு அதிகமான மக்கள் அடிக்கடி பயணம் செய்ய வேண்டியிருப்பதனால் நாடு முழுவதும் சிறப்பான சேவையை நடத்தவே உத்தேசித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் உடனடியாக பேருந்து கட்டண மறுசீரமைப்பு தற்போது அவசியமில்லையெனச் சுட்டிக்காட்டிய கெமுனு விஜேரட்ன தேசியக் கொள்கைப்பிரகாரம் ஜூன் முதலாம் திகதி பேருந்து கட்டணம் மறுசீரமைப்புக்கு எடுத்துக் கொள்ளப்படுவதே போதுமானது என்றும் தெரிவித்தார். இதிலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானிக்கும் கட்டண உயர்வுக்கு தமது சங்கம் சம்மதிக்குமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த வாரம் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரட்னவுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளமை தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வழக்கறிஞரிடமிருந்து அவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 300 பேருக்கு டெங்கு நோய் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தில் மட்டும் இதுவரை 300 இற்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த மாதத்தில் மட்டும் 20 இற்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் யாழ். போதனா வைத்தியசாலையின் தொற்று நோய்த்தடுப்பு பிரிவு புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தில் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை தொற்று நோய்த் தடுப்பு பிரிவு புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-6)

# புதன், வியாழன், வெள்ளி கிரகங்கள் ஒரே நேர்கோட்டில்

(கொழும்பு)

ஒரே நேர் கோட்டில் புதன், வியாழன், வெள்ளி ஆகிய 3 கிரகங்களும் நிற்கும் அற்புத நிகழ்வை எதிர்வரும் 28 ஆம் திகதி காணலாம். பூமியில் இருந்து காண்போரின் கண்களுக்கு இந்தக் காட்சியானது புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிரகங்கள் அருகருகே இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தக்கூடும். இரண்டு பௌர்ணமி நிலவின் அளவிற்கு புதன் கிரகம் காணப்படும். அதனையடுத்து சற்று ஒளிமங்கிய நிலையில் வியாழன் கிரகமும் நேர்கோட்டில் தென்படும். இவை இரண்டிற்கும் சற்று தூரத்தில் வெள்ளி கிரகமும் தெரியும். அன்றைய தினம் சூரியன் மறைந்த பின் வானத்தின் மேற்கு திசையில் இக்காட்சியைக் காண முடியும்.

பூமியில் இருந்து புதன் கிரகத்தை சென்றடைய 38 மில்லியன் கிலோமீற்றர் பயணிக்க வேண்டும். புதன் கிரகத்தில் இருந்து வியாழன் 660 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. வியாழனில் இருந்து வெள்ளி 744 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இவை மூன்றையும் ஒரே நேர்கோட்டில் காணும் அபூர்வ வாய்ப்பு அன்றைய தினம் நமக்கு கிடைக்கவுள்ளது. (அ-2)

# வேளாங்கண்ணி திருவிழா

மிருசுவில் பழைய வாய்க்கால் தூய வேளாங்கண்ணி சிற்றாலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை தேவ நற்கருணை விழா இடம்பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. இத்திருவிழா நாளில் இவ்வாலயம் யூபிலி ஆண்டினுள் காலடி எடுத்து வைப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# விதவைப் பெண்களை இலக்குவைத்து வன்னிப் பகுதியில் தொடரும் மோசடிகள்

(மல்லாவி)

வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர்களை இழந்த விதவைப் பெண்களை இலக்கு வைத்து பல மோசடிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் ஏமாற்று மோசடிப் பேர் வழிகளிடம் விழிப்புடன் இருக்குமாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாக குடும்பத்தலைவர்களை இழந்த பெண்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வாழ் கின்றனர்.

இவர்கள் தமது குடும்பங்களை கொண்டு நடத்த முடியாது பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இதில் அநேகமானவர்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள் எதுவும் கிடைக்கமில்லை.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திசிலவிஷமிகள்புதியமுறைகளிலான மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இளம் விதவைப் பெண்கள் பற்றிய விபரங்களை தரகர் மூலமாக சேகரிக்கும் இவர்கள், இவர்களைத் தாம் திருமணம் செய்து அவர்களின் குடும்பத்தை காப்பாற்றுவதாகவும் தங்களைத் திருமணம் செய்யும் படியும் ஆசை வார்த்தைகளை கூறி அப்பெண்களை திருமணம் செய்து கொள்கின்றனர்.

இவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி திருமணம் செய்யும் அப்பாவிப் பெண்கள் சட்ட ரீதியாக திருமணப்பதிவை மேற்கொள்வதுமில்லை.

மேலும் திருமணம் செய்த நபர்களின் விபரங்களும் இவர்களிடமில்லை. சில சந்தர்ப்பங்களில் திருமணம் செய்த நபர்கள் இவர்களிடமிருந்து பணம், நகை என்பவற்றை பெற்றுக் கொண்டு மறைந்தும் விடுகின்றனர்.

இதனால் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சுகின்றது. இதனால் மீண்டும் வறுமைக்கும் அவமானத்திற்கும் உட்படும் பெண்கள் தற்கொலை முயற்சிக்கும் ஆட்படும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதேபோல் இன்னொரு பகுதியினர் வெளிநாட்டு ஆசையைத் தூண்டியும் தென்பகுதியில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறியும் முற்பணங்களை வழங்கி விதவைப் பெண்கள் மற்றும் இளம் பெண்களையும் அழைத்துச் சென்று பாலியல் தொழிலாளிகளாக மாற்றும் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

எனவே, வாழ்க்கையில் வசந்தங்களைத் தொலைத்து விட்டு வன்னி மண்ணில் விரக்தியுடன் வாழும் எமது அன்புச் சகோதரிகளே, வறுமையின் காரணத்தால் எமது கலை, பண்பாட்டு கலாசார விழுமியங்களைச் சிதைக்காது சிறப்பான வாழ்க்கையை வாழ வேண்டும் என அனைவரும் உறுதி பூணுவோமாக என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-15)

# மரண அறிவித்தல்



## திருமதி சுயந்தி கணேசமூர்த்தி

**(இலங்கை வங்கி, திருநெல்வேலி)**

*இல.60, சேர்.பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுயந்தி கணேசமூர்த்தி (இலங்கை வங்கி, திருநெல்வேலி) 17.05.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான தணிகாசலம் - கதிராசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் கணேசமூர்த்தியின் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), அன்பு மனைவியும் தர்சனன் (கொமர்ஷல் வங்கி, சாவகச்சேரி), வைஷ்ணவி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, A/L) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.*

*இவர் சந்திரமோகன் (கனடா), சுமதி (கொழும்பு), வாசுகி (கனடா), குகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராதாகிஸ்ணமூர்த்தி (அதிபர் - நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை) காலஞ்சென்ற முருகதாஷ் மற்றும் ஜலயா, செல்வநாயகம், விஜயந்தி, சிவமூர்த்தி (கனடா), குகமலர், சிவசோதி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.05.2013 புதன்கிழமை பி.ப. 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.*

*இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**தகவல் :**

**கணவர் கணேசமூர்த்தி**

*இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்.*

*(சி-3379)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உடல் ஆரோக்கியத்தில் விற்றமின் சி இன் பங்களிப்பு

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

இரத்தக்குழாய் திசுக்களை இறுக்கமாக இணைத்து வைப்பது கொலாஜின் எனும் புரதம். இந்த கொலாஜின் சரியான் அள்வில் உற்பத்தி ஆக வேண்டுமானால் விற்றமின் சி' தேவை. உடலில் விற்றமின் -சி அளவு குறையும் போது கொலாஜின் சரியாக உற்பத்தி ஆகாது. இக்காரணத்தால் இரத்தக் குழாய்களில் அதிலும் குறிப்பாக தந்துகி இரத்தக் குழாய்களில் சிறிய சிறிய துவாரங்கள் விழுந்து விடும். இதன் விளைவாக உடல் உறுப்புகள் பலவற்றில் சிறு சிறு இரத்தக் கசிவுகள் ஏற்படும். கை கால் மற்றும் தொடைப்பகுதிகளில் சிறிய அழுத்தம் கொடுத்தால்கூட அங்குள்ள தோலில் சிவத்த இரத்தக் கசிவுகள் வட்டவட்டமாக தெரியும். கண்ணில் விழிவெண்படலத்தில் இரத்தப் புள்ளிகள் தோன்றும், மூக்கில் இருந்து இரத்தம் கொட்டும் ,சிறுநீரில் இரத்தம் வெளியேறும், மலம் இரத்தம் கலந்து போகும் இவற்றின் விளைவாக இரத்தச்சோகை ஏற்படும்.

ஸ்கோர்வி நோய் வந்தவருக்கு ஆரம்பத்தில் தோல் வறட்சியாக் காணப்படும். நாளடைவில் தோல் தன்னுடைய இயல் பான நெகிழ்வுத் தன்மையை இழந்து முரட்டுத் தன்மையைப் பெற்று விடும். முக்கியமாக கை ,கால்களில் உள்ள முடி முரடாகி விடும். முடியின் வேர்களில் இரத் தம் கசியும்.

இந்த நோய் உள்ளவர்களுக்குப் பற் கள், பலமிழந்து காணப்படும. பல்ஈறுக ளும் பலவீனப்படும். பல்லுக்கும் ஈறுக்கும் தொட



ர்பு விட்டு விடும். இதன் விளைவால் பற்கள் விரைவிலேயே ஆட்டம் கண்டு விழுந்து விடும். சிலருக்குப் பல் ஈறுகள் வீங்கி விடும். வீங்கிய ஈறுகளில் புண் உண்டாகி வலிக்கும். இதனால் பற்கள் விழத் தொடங்கும். இன்னும் சிலருக்கு பற்களில் இரத்தம் கசியும், பல் துலக்கும்போது இரத் தக் கசிவு அதிகமாகும்.

ஸ்கோர்வி நோய் வந்து விட்டால் உடலில் எலும்புகளும் பாதிக்கப்படும். காரணம் குருத்தெலும்புகள் சரியான அளவில் வளர்ச்சி பெறுவதற்கும் எலும்புகள் உறுதியாக இருப்பதற்கும் விற்றமின் -சி போதியளவில் இருக்கவேண்டும். ஆகவே, விற்றமின் -சி பற்றாக்குறை ஏற்படும்போது எலும்புத் திசுக்கள் சரியாக வளர்ச்சி பெறாது. இதனால் எலும்புகள் பலவீனமாக இருக்கும். எலும்பு மூட்டுகள் சரியாக இணையாமல் இருக்கும். விளைவு நாம் இலேசாகத்தரையில் விழுந்து விட்டால்கூட கை,கால் எலும்புகள் முறிந்து விடும். அல்லது எலும்பு மூட்டுக்களில் இரத்தக் கசிவு உண்டாகி வீக்கம் காணப்படும். இந்த அறிகுறிகள் பச்சிளம் குழந்தைகளிடமும் இளம் குழந்தைகளிடமும் வெகுவாக காணப்படும்.

கைக்குழந்தைகளுக்கு ஸ்கோர்வி நோய் வருமானால் பசி குறையும். எந்நேரமும் குழந்தை அழுது கொண்டிருக்கும். வயதுக் கேற்ப உடல் எடை இருக்காது .உடல் வெளுத்துக்காணப்படும். மார்பு எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கும். வழக்கமாக தாய்ப்பால் தரும் வரை குழந்தைகளுக்கு விற்றமின் - சி பற்றாக்குறை ஏற்படுவதில்லை. தாய்ப் பால் தருவதை நிறுத்தி விட்டு பவுடர் பால் தரத் தொடங்கும் போது குழந்தைகளுக்கு இந்த நிலைமை ஏற்படும். காரணம் 100 மில்லி கிராம் தாய்ப்பாலில் 3 கிராம் விற்றமின் -சி உள்ளது. ஆனால் பவுடர் பாலில் அல்லது பசும் பாலில் இதன் அளவு மிகக் குறைவு.

அது மட்டுமில்லாமல் பவுடர் பால் அல்லது பசும் பாலைக் காய்ச்சும் போது விற்றமின் -சி அழிந்து விடுகிறது. இதனால் இன்னமும் இத்ன் அளவு குறைந்து விடுகிறது. இது விற்றமின் -சி பற்றாக்குறைக்கு வித்திடுகிறது. வி ற்றமின் -சி பற்றாக்குறையால் உண்டாகிற பிற குறைபாடுகள் இவை. அதீத சோர்வும் களைப்பும் ஏற்படும். முகம் வெளுக்கும். சமிபாட்டு கோளாறுகள் வரும். காயங்கள் மற்றும் புண்கள் ஆறுவதற்குத் தாமதம் ஆகும். தலைமுடி உதிரும். அடிக்கடி சளி பிடிக்கும். தடிமன் தொல்லை தரும். தும்மல் தொடரும். தொண்டையில் புண் வரும். மூட்டுக்கள் வீங்கும் மூட்டு வலி வரும்.

**விற்றமின் -சி பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க சில வழிகள்**

குழந்தைக்கு குறைந்தது ஆறு மாதம் தாய்ப்பால் தர வேண்டியது முக்கியம். அதன் பின்பு தினமும் ஒரு தேக்கரண்டி ஒரேஞ்சுப் பழச்சாறு சாப்பிடத்தரலாம் அல்லது 100 மில்லி லீற்றர் தோடம்பழச்சாறு குடிக்கத் தரலாம்.

இளைஞர்கள், யுவதிகள்,பெரியவர்கள் அனைவரும் முளை கட்டிய தானியங்களில் ஒன்றை தினமும் 100 கிராம் அளவில் சாப்பிடலாம். அதிக செலவில்லாமல் விற்றமின்-சி யைப் பெறுவதற்கு இது தான் சிறந்த வழி .100 கிராம் முளைகட்டிய தானியத்தில் 10 மில்லி கிராம் விற்றமின் -சி உள்ளது. இது ஸ்கோர்வி நோயை வர விடாமல் தடுப்பதற்குப் போதுமானது.

விற்றமின் -சி உள்ள காய்களையும் பழங்களையும் அப்படியே சாப்பிடுவது நல்லது. இவற்றைச் சூடுபடுத்தும் போதும் சமைத்த பின் நெடுநேரம் சேமித்து வைக்கும் போதும் இவற்றில் உள்ள விற்றமின் -சி அழிந்து விடும். இதனைத் தடுக்க காய் கறிகளையும் பழங்களையும் உடனடியாகச் சமைத்து சாப்பிடுவதே நல்லது. புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளவர்களுக்கும் விற்றமின் -சி யை உடல் ஏற்பதற்குச் சிரமப்படும்.

ஆகவே, இப்பழக்கம் உள்ளவர்கள் மற்றவர்களைவிட தினமும் 35 மில்லி கிராம் விற்றமின்-சி யை கூடுதலாக உட் கொள்ள வேண்டும். வாய்வழிக் கருத்தடை மாத்தி ரைகளைச் சாப்பிடும் பெண்களுக்கு இயல்பாகவே இந்த விற்றமின் அளவு குறையும். ஆகவே, இப்பெண்களும் விற்றமின் -சி யைச் சற்று கூடுதலாக எடுத்துக் கொள்ள வேண்டும். (முற்றும்)

## விற்றமின்-சி யை எப்படிக் கண்டுபிடித்தார்கள்?

ஸ்கர்வி என்ற பெயரைக் கேட்டாலே உலகம் பயந்து நடுங்கிய காலம் ஒன்று இருந்தது. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட முந்நூறு ஆண்டுகளில் உலகில் சுமார் இருபது இலட்சம் பேர் இந்த நோயால் உயிரிழந்திருப்பார்கள் என்று புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. அப்படி இறந்தவர்களில் பெரும்பாலானோர் கடலில் பயணம் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1498 ஆம் ஆண்டில் வாஸ்கொடகாமா இந்தியாவுக்கு வந்த போது அவருடைய கப்பலில் மூன்றில் இரண்டு பங்கு பேர் இந்த நோயால் இறந்து விட்டனர் என்று வரலாறு கூறுகிறது .

இவ்வகையான கொடூரமான இறப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் ஜேம்ஸ் லிண்ட் எனும் பிரிட்டன் மருத்துவர். இவர் 1750 ஆம் ஆண்டில் பிரிட்டன் கடற்படையில் மருத்துவராகப் பணி செய்து வந்தார். அப்போது அவர் தன் கப்பலில பயணம் செய்பவர்கள் அனைவருக்கும் உணவு இடைவேளைகளில் ஒரேஞ்சுப்பழச்சாறு அல்லது எலுமிச்சைப்பழச்சாறு தருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதன் காரணமாக இவருடைய கப்பலில் பயணம் செய்தவர்களுக்கு ஸ்கர்வி நோய் ஏற்படவில்லை, மரணங்களும் நேரவில்லை. அதே நேரத்தில் ஏனைய கப்பல்களில் பயணம் செய்தவர்கள் பல பேர் கொத்துக்கொத்தாக இறந்து கொண்டிருந்தனர். இதனை அடிப்படையாகக் கொண்டு 1753ஆம் ஆண்டில் ஸ்கர்வி நோயைத் தடுக்க வேண்டுமானால் நிறைய ஒரேஞ்சு, எலுமிச்சைப்பழச் சாறுகளைச் சாப்பிட வேண்டும் என்று ஆலோசனை கூறினார் லிண்ட். ஆனால் பெரும்பாலானோர் இதை நம்பவில்லை. காரணம் உணவுக்கும் நோய்க்கும் தொடர்பு உள்ளது என்கிற மருத்துவ அறிவு அப்போது பொதுமக்களுக்கு இல்லை என்றாலும் ஜில்வா(zilva) என்பவரும்ஆல்பர்ட் ஸென்ந்த் க்யோர்கி (albert szent-gy-orgi)என்பவரும் எலுமிச்சையில் இருந்து அஸ்கார்பிக் அமிலத்தை அதாவது விற்றமின் -சி யைப் பிரித்தெடுத்தனர். அதை ஸ்கர்வி நோயாளிக்குக் கொடுத்து பார்த்தனர் . நோய் குணமானது. எனவே விற்றமின் சி குறைபாடு காரணமாகவே ஸ்கர்வி நோய் வருகிறது என்பதையும் திராட்சை, ஒரேஞ்சு, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்களைச் சாப்பிட்டால் இந்த நோயைத் தடுக்கவும் முடியும், குணப்படுத்தவும் முடியும் என்பதையும் உறுதி செய்தனர். ஆக உணவுக்கும் நோய்க்கும் தொடர்பு உள்ளது என்று உலகம் புரிந்து கொண்டது விற்றமின் சி கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் தான்.




# பொதுநலவாய மாநாட்டை இலங்கையிலேயே நடத்துக

## மாலைதீவு வலியுறுத்து

(மாலே)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு இலங்கையிலேயே நடத்தப்பட வேண்டுமென மாலைதீவு கோரியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டிய தேவையில்லை என மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல் சாமட் அப்துல்லா தெரிவித்துள்ளார்.


இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை வேறு நாட்டுக்கு மாற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.பயங்கரவாதம் காரணமாக இலங்கை மக்கள் பாரியளவு நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

இவ்வாறான ஓர் பின்னணியில் இலங்கைக்கு எதிராக தண்டனை விதிக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

பிரச்சினைகளுக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டங்களை முன்வைப்பதற்கு இலங்கைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



மலேசிய தமிழ் அமைப்பின் அனுசரணையுடன் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பகுதியில் விவசாய உதவி வழுங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. மீளக்குடியேறிய 20 விவசாய பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் அதற்கான குழாய்களும் வழங்கப்பட்டதோடு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 30 வாழைக்குட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன .இதன்போது சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் பயனாளிகளுக்கு மேற்படி உதவிப் பொருட்களை வழங்குவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை முறைமை இலங்கைக்கு தேவையற்றது

## மல்வத்து மாநாயக்க தேரர்

நாட்டில் நடைமுறையில் உள்ள நிறைவேற்றுஅதிகாரம்கொண்டஜனாதிபதிமுறைமை, மாகாணசபை முறைமை மற்றும் விரும்பு வாக்கு முறைமை என்பன நாட்டிற்கு எந்த வகையிலும் பொருத்தமுடைவையல்ல. இவை அனைத்தின் மூலமும் பண விரயமே ஏற்படுகின்றது எனவும் மல்வத்து மாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார். அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மல்வத்து மாநாயக்க தேரரை சந்தித்து போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த மூன்று முறைமைகளும் விரைவில் நீக்க ப்பட வேண்டும். இதற்கு பதிலாக நாட்டுக்கு பொருத்தமான புதிய அரசியலமைப்புச் சட் டம் உருவாக்கப்பட வேண்டும்.இவை நீக்கப் படாவிடின் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.

மாகாண சபை முறைமை என்பது இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்கு பொருத்தமானதாக இருந்த போதிலும், இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு எந்த வகையிலும் பொருந்தாது. இந்தியாவில் உள்ள மாநிலங்கள் இலங்கையை விட பெரியவை என்பதால் அங்கு அதிகாரத்தை பரவலாக்குவது அவசியமானது. எனினும் இலங்கைக்கு இது தேவையற்றது.

மாகாணசபை முறை ஏற்படுத்தப்பட்டு 30 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள போதிலும், இதனால் நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.மாகாணசபை முறை மூலம் முதலமைச்சர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் பராமரிக்கப்பட்டனரேயன்றி வேறு எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஒருவர் வேலை ஒன்றை செய்வதற்காகச் செல்லும் போது, அங்கிருக்கும் அதிகாரிகள் இது மாகாண சபைக்கும் நகரசபைக்கும் உரியது என கூறி திருப்பி அனுப்பப்படுகின்றனர். நாட்டில் நிர்வாகிகள் அதிகரித்துள்ளனர். ஆனால், அவர்களுக் கான செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதில்லை. பணத்தில் மட்டுமே குறியாக இருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# குற்றம் புரிந்த கொடூரனை சட்டத்தின்முன் நிறுத்துங்கள்

## ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

போரினால் பாதிக்கப்பட்டவர்களை நசுக்க முனைபவர்களை சட்டத்தின்முன் நிறுத்துமாறு கோரி வாழ்வுரிமைக்கான கோரிக்கை என்ற தலைப்பில் ஜனாதிபதிக்கு வவுனியா சேனைப்பிலவு மக்கள் மற்றும் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு மகஜரை அனுப்பி வைத்துள்ளது.

வவுனியா நெடுங்கேணி சேனைப்பிலவு கிராமத்தில் கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையன்று 7 வயதுடைய பாடசாலை சிறுமி பாலியல் வன்புணர்வுக்குள்ளாக் கப்பட்ட சம்பவத்தை கண்டித்து நேற்று நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தின் போதே ஜனாதிபதிக்கு கையளிப்பதற்காக நெடுங்கேணி பிரதேச செயலாளரிடம் இம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று கிராமத்தில் ஏழே வயதான பள்ளிச் சிறுமி காமுகனின் கொடூர இச்சைக்கு இரையாக்கப்பட்டதையும் இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் அச்சமான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதையும் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நீண்ட போரில் எண்ணற்ற உயிர்களையும் சொத்துக்களையும் இழந்த நாம் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்வைக் கட்டியெழுப்ப முயலும் இக்காலகட்டத்தில் இத்தகைய சம்பவங்களின் மூலம் எம்மை நசுக்க முனைபவர்களை இனங்கண்டு சட்டத்தின்முன் நிறுத்த வேண்டுமென்றும் இவை மேலும் தொடராமல் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோருகின்றோம் என அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்றதொரு மகஜர் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-266)

# அநாவசியமான ஆய்வுகூட பரிசோதனையை தவிருங்கள்

## சுகாதார அமைச்சின் செயலாளர் கோரிக்கை

அநாவசியமான முறையில் நோயாளர்களை ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் நிஹால் ஜயதிலக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அநாவசியமான முறையில் நோயாளர்களை ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தும் போது சுகாதாரத் துறைக்கான நிதி வீணாகச் செலவாவதுடன் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியவரை உரிய நேர காலத்தில் பரிசோதனைக்கு உட்படுத்த முடியாத நிலைமையும் ஏற்படும்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மாத்திரம் கடந்த ஆண்டில் 35 இலட்சம் ஆய்வு கூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறாயின் நாளுக்கு ஒன்பதாயிரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு மணி நேரத்திற்கு முந்நூறு பரிசோதனை என்றவாறும் அமைந்துள்ளது.

குறிப்பாகக் கடந்த ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் இந்த வைத்தியசாலையில் 3 ஆயிரத்து 153 உயிரியல் இரசாயன ஆய்வு கூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரம் இக்காலப்பகுதியில் அவசர தேவையின் நிமிர்த்தம் 637 உயிரியல் இரசாயன ஆய்வு கூடப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.(அ-2-5)

# தனது நோக்கத்தை விட்டு விலகிச் செல்கின்றது ஸ்ரீ.சு.கட்சி

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அது உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை விட்டு விலகிச் செல்கின்றது. எனவே கட்சியைத் தூய்மைப்படுத்த வேண்டுமென அக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

1956ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் டி.ஏ.ராஜபக்ச ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினர். குறித்த தலைவர்கள் எதற்காக கட்சி யை உருவாக்கினார்கள் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது கட்சிக்குள் பல்வேறு சக்திகள் ஊடுருவியுள்ளன. அவற்றின் நடவடிக்கைகளால் கட்சிக்கு பாதக நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே கடந்த காலத்தையும் தற்போதைய நிலைமைகளையும் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பாவனைக்குதவாத கழிவு தேயிலை மீட்பு

(கொழும்பு)

பாவனைக்கு உதவாத சுமார் 20 ஆயிரம் கிலோ எடையுள்ள கழிவுத் தேயிலையை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அண்மையில் கைப்பற்றிள்ளனர்.

பேலியாகொடை துடுகெமுனு மாவத்தையில் உள்ள வீடொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் நடத்தி வந்த கழிவு தேயிலை களஞ்சியசாலை ஒன்றை முற்றுகையிட்ட அதிரடிப்படையினர் 20ஆயிரம் கிலோ கழிவு தேயிலையை மீட்டெடுத்துள்ளனர்.

எஸ்.ரி. எப்.பினர் மேற்கொண்ட முற்றுகை மற்றும் தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த இடத்தில் இருந்த இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் பெருந் தொகை உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கழிவுத் தேயிலையைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் லொறி ஒன்று 20 அடி நீளமான கொள்கலன் இரண்டு, தேயிலை பொதி செய்யும் ஆயிரத்து 810 வெற்று பைகள், 13 சவல்கள், தேயிலை பொதி செய்யப்பயன்படுத்தப்படும் உபகரணங்கள் ஆகியவற்றையும் மீட்டெடுத்துள்ளனர் .

இது தொடர்பான விசாரணையை இலங்கைத் தேயிலை சபையினரும் ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# தாதியை மோதிவிட்டு தப்பியது முச்சக்கர வண்டி


தாதியர் ஒருவர் விபத்தில் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திற்கருகில் நடைபெற்றுள்ளது.இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா பொது வைத்தியசாலையின் தாதியொருவர் மோட்டார் சைக்கிளில் கடமை முடிந்து வீடு நோக்கி சென்று கொண்டிருந்த வேளை எதிரே வந்த முச்சக்கரவண்டி அவரை மோதியுள்ளது. இதன் காரணமாக கால் முறிவுடன் பலத்த காயத்துக்குமுள்ளான தாதி வவுனியா பொது வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து முச்சக்கரவண்டியில் சாரதி வேகமாக ஓடிச் சென்று தப்பியதால் பொலிஸாரால் அவரை கைது செய்ய முடியவில்லை என வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளளர். (அ-2-266)




ஈடி. எஸ் விளையாட்டு கழகம் நடத்திய துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப்போட்டியில் கொக்குவில் காமாட்சி விளையாட்டு கழகத்துடன் மோதிய உடுவில் உதய சூரியன் அணி வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்து இவ் இறுதிப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்திரனாக கலந்து கொண்ட வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் அ.ஜெபநேசன் 2 ஆம் இடத்தை பெற்ற அணிக்கான காசோலையை வழங்குவதையும் தவிசாளருடன் வெற்றி பெற்ற அணியினர் காணப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சித்தர் காட்டிய வழி



ஆன்மீகம் 10

கலியுகத்தில் சிலகாலம் நீங்கள் மனிதர்களாப் பிறந்து ஆள்வீர்கள் என்று வரமளித்து மறைந்தார். அதனால் இந்த யுகத்தில் இராமலிங்க சாமி பிறப்புக்கு முன்பே மனிதனாகப்பிறப்பவன் லட்சத்துக்கு ஒருவனாகவும் மற்றவை நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன என்ற உயிரினங்கள் மனிதனாகப் பிறந்து வாழ்ந்து வருகின்றன. இவை பிறக்கத் துவங்கியதும் ரிஷிகள், சித்தர்கள், முனிவர்கள், எல்லோரும் மலை, குகைக்குள் தவம் செய்யச்சென்று விட்டனர் என்றார். இவர்கள் பிறந்தால்- அவர்கள் ஏன் மனிதகுலத்தை விட்டு மறைய வேண்டும்? இது அடியேனின் கேள்வி, ராஜா! மிருகக்குணங்கள் மத்தியில் சாதுக்கள், சன்னியர்களுக்கு எப்படி மதிப்பிருக்கும்! அதனால் துஷ்டரைக் கண்டால் தூரவிலகு என ஒரு அடி விலகிப் போய்விட்டார்கள்! என்ன வெளுத்தாலும் அடுப்புக்கரி வெளுக்குமா! மனிதனாக பிறந்தாலும் அவன் எந்த மிருகத்தின் அம்சத்தில் பிறந்திருக்கிறானோ, அந்த குணங்களை தானே வெளிக்காட்டுவான். திருடனைப்பார்த்து ராஜபார்வை பார் என்றால் திருட்டு முழிதானே கிடைக்கும். முன்பெல்லாம் ஒருவனுக்கும் மற்றவனுக்கும் பகை என்றால் நேருக்கு நேர்தான் மோதுவார்கள். அவர்களின் போரில் ஒரு தருமம் இருக்கும். ஆயுதம் இழந்தவனைத் தாக்கக்கூடாது. ஆடை அவிழ்ந்தவனுக்கு அதை கட்டிக்கொள்ள அவகாசம் கொடுக்க வேண்டும்! முதுகில் குத்தக்கூடாது. என்றெல்லாம் தர்மவழியில் போரிட்டார்கள். இன்று என்ன நிலை! ஒரு கூட்டமே கொடிய ஆயுதங்களால் நிராயுதபாணியான ஒரு தனிமனிதனை ஓட, ஓட விரட்டி, கொடூரமாகப் படுகொலை செய்கிறது. இது போல செய்திகளை அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கின்றோம். இது ஒரு நாயை பல நாய்கள் துரத்திச் சென்று கடித்து குதறுவதைப்போல இல்லை? ஒரு கட்சிக்காரனுக்கு இன்னொரு கட்சிக்காரனைக் கண்டால் பிடிக்காது. ஒரு சாதிக்கு இன்னொரு சாதிக்காரனைக் கண்டால் பிடிக்காது.



ஒரு ஊர்க்காரனுக்கு இன்னொரு ஊர்க்காரனைக்கண்டால் ஆகாது. ஒரு மாநிலத்துக்கு இன்னொரு மாநிலம் என்றால் வேம்பாக இருக்கும். சிவன்கோயிலுக்கு வைணவன் போகமாட்டான். உலகில் ஷியா முஸ்லிம்கள், கத்தோலிக்கரை அழிக்கத்துடிக்கும். பிராட்டஸ்டாண்டுகள், தெருவுக்குத் தெரு பகை. இவைகளைக் காணும்போது யானையைக் கண்டால் சிங்கத்துக்குப்பிடிக்காது. சிங்கத்தைப் புலிக்குப்பிடிக்காது. பாம்புக்கும் கீரிக்கும் ஆகாது. பருந்து சின்னப் பறவைகளுக்கு எமன். ஒரு மிருகத்தின் எல்லைக்கு அதன் இனமாக மற்றொரு மிருகமே வந்தாலும் அங்கு உரிமைப்போர் நிகழும். சிறுத்தை கஷ்டப்பட்டு வேட்டையாடியதை, மரத்தின் உச்சிக்குக் கொண்டு சென்று பத்திரப்படுத்திக்கொண்டு தின்னும்! இல்லையேல் அதை விட வலுத்த சிங்கமோ, காட்டு நாய்கள் கூட்டமோ, கழுதை புலிகள் கூட்டமோ வந்து, அந்த இரையைப் பறித்துக்கொள்ளும். இதற்கிடையில் அந்த மாமிசத்துக்கு கழுகு கூட்டங்கள் போட்டியிடும். நரிகள் சமயம் பார்த்து சிறுதுண்டுகளைக் கவ்விக்கொண்டு ஓடும். வலியவனே வெல்லுவான்! இப்படித்தானே இன்று மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்று கொடூரமான கற்பழிப்புகள், கொலைகள் ஆகியவை மிருகத்தனமாக நடக்கின்றன. இன்று மனிதனாக வாழ விரும்புகிறவன் கஸ்டப்படுகிறான். அவனுக்கு எங்கும் நியாயம் கிடைப்பதில்லை. லஞ்சம், ஊழல் என்று அநீதியை காவல் காக்கின்றான். எவருக்கும் நாட்டுப் பற்றில்லை. அரசியலும் இன்று அக்கிரமங்களின் உச்சியில் நடனமாடிக்கொண்டிருக்கிறது. கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் எல்லாம் அரசின் தலையெழுத்தை நிர்ணயிக்கிறார்கள். இன்று காசுதான் கடவுள். அரசியல் நாகரிகம் அடியோடு அழிந்துபோனது. நாட்டின் நலம் பற்றி யாருக்கும் அக்கறை இல்லை. தாம் வாழவேண்டும். அதற்காகத் தன்கட்சி வாழ

**அன்னை சித்தர்**
**இராஜ்குமார் குருஜி**

வேண்டும். ஒருவேளை தற்போது இருக்கும் கட்சியில் சம்பாத்தியம் குறைவதுபோலத் தோன்றினால் அடுத்த கட்சியில் ஐக்கியமாவதோடு தாய்க் கட்சியை வேசிக்கட்சி என்று மாற்றி ஏசும் இரட்டை நாக்குத்தனம்! காசு உள்ளவர்களுக்கே தரமான கல்வி. காசு இருந்தால் பரீட்சை எழுதாமலேயே பாஸ்! ஆராய்ச்சி பண்ணாமலே டாக்டர் பட்டம்! டிகிரி டிப்ளோமா எது வேண்டுமானாலும் உடனே கிடைக்கும். இன்று அரசியல், முதல் இல்லாத பெரும் வியாபாரமாகிவிட்டன.

(தொடரும்)

# இலங்கையின் "தென்னாசியாவின் சிங்கப்பூர்" கனவு...?



அமல் ஜெயசிங்

**போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இரு முழு ஆண்டுகளில் இலங் கையின் பொருளாதாரமானது 8.0 மற்றும் 8.2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த ஆண்டில் போர் நடைபெற்ற ஆண்டுகளைவிட இலங்கையின் பொருளாதாரம் 6.4 வீதமாக வீழ்ச்சிய டைந்துள்ளது - ஏ.எப்.பி செய்தியாளர் அமல் ஜெயசிங்**

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர், இலங்கை தென்னாசியாவின் வலுமிக்க பொருளாதார நாடாக வளருமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இலங்கையின் பொருளாதாரமானது நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

மே 2009இல் இலங்கை இராணுவப்படையால் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டபின், 37 ஆண்டுகளான போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் துரிதவளர்ச்சியடைவதுடன், தென்னாசியாவின் சிங்கப்பூர் என்ற நிலைக்கு மாற்றப்படும் எனவும் இலங்கை அரசாங்கம் எதிர்வு கூறியிருந்தது.

"போரின் முடிவில் இலங்கையானது தனது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான சடுதியான வாய்ப்பைக் கொண்டிருந்தது. ஆனால், அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம். எமது நாட்டின் பொருளாதாரக்கொள்கைகள் உலக முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்ப்பதாக உருவாக்கப்படவில்லை" என எதிர்க்கட்சி அரசியல்வாதியும் பொருளியியலாளருமான ஹர்சா டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் அரச தொழிற்துணைக்களங்களில் அதிகம் தங்கியிருப்பது மற்றும் 2011ல் சில தனியார் தொழில் நிறுவனங்கள் மீளதேசியப்படுத்தலுக்கு உள்ளாகியமை போன்றன இலங்கையில், அனைத்துலக முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வதில் தயக்கம் காண்பிப்பதற்கான உடனடிக் காரணங்களாகும் என டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இரு முழு ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரமானது 8.0 மற்றும் 8.2 சதவித வளர்ச்சியைக் கொண்டிருந்தது. ஆனால், கடந்த ஆண்டில் போர் நடைபெற்ற ஆண்டுகளை விட இலங்கையின் பொருளாதாரம் 6.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2013ல் இந்த வீதமானது 7 சதவீதமாக அதிகரிக்கும் என இலங்கை அரசாங்கம் எதிர்வுகூறியுள்ள போதிலும், இது மிகைப்படுத் தப்பட்ட நம்பிக்கையாக உள்ளதாக அனைத்துலக நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

போர் முடிவடைந்ததன் பின்னர் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கமானது குறைவடைந்த போது அனைத்துலக நாணய நிதியம் இலங்கைக்கு 2.6 பில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது. இலங்கையானது நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் எனவும் இதன்பணவீக்கம் அதிகரித்து வருவதாகவும் அனைத்துலக நாணயநிதியம் எச்சரித்திருந்தது.

மே 18, 2009இல் அன்று விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதை இலங்கை அரசாங்கம்கொண்டாடிய போது, நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக அனைத்துலக நாணயநிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கொசி மாத்தேய் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஆசியாவில் மிகக் குறைந்த வருவாயைப் பெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக்காணப்படுவதாகவும், இதேபோன்று ஆசியாவின் பொது முதலீடுகள் மிகக் குறைவாக மேற்கொள்ளப்படும் நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாகவும் இதன் உளநாட்டுக் கடனானது மொத்த தேசிய உற்பத்தியில் 80 சதவீதமாகக் காணப்படுவதாகவும் கொசி மாத்தேய் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

462

## மீன் செடி



கெய்ரோ நகரில் கோஹா என்ற பிரசித்தி பெற்ற விதூஷகன் இருந்தான். அவனுக்கு தன் வீட்டில் செடி, கொடிகளை வளர்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. எனவே, தன் வீட்டின் பின்புறமாக பூச்செடிகளை வைத்தும், பாத்திகள் கட்டி, விதவிதமான செடிகளை நட்டும் தோட்டம் போட்டான்.

அவனது தோட்டத்தைக் கண்டு அவனது நண்பர்கள் பலர் பலவிதமான யோசனைகளைக் கூறினார்கள். சிலர் சில பூச்செடிகளைக் கொண்டு வந்தும் கொடுத்தனர். இப்படியாக கோஹாவின் பூந்தோட்டம் மிக அழகாக அமைந்துவிட்டது.


ஒரு நாள் கோஹா தோட்ட வேலை செய்து கொண்டிருக்கையில் ஒரு பிரபு அவனைப் பார்க்க வந்தான். அப்போது அவன் "எல்லோரும் உன் தோட்டத்தையும், உன்னையும் பிரமாதமாகப் புகழ்கிறார்களே. அப்படி நூதனமாக எதையும் நீ செய்துவிடவில்லையே. எல்லாம் சாதாரண செடிகளாகத்தானே இருக்கிறது" என்றான்.

அதற்கு கோஹாவும் "நானும் உலகத்தில் கிடைக்கும் செடிகளைத் தானே வளர்க்கமுடியும்" எனவே அப்பணக்காரனும் "நான் ஒரு புதியரக விதை கொடுக்கிறேன். ஆனால், அதை விதைத்து செடியாக உன்னால் வளர்க்க முடியுமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது" என்றான்.

அதற்கு கோஹா "என்னால் முடியும்" எனவே, அப்பணக்காரனும் "சரி, நாளை என் வேலைக்காரன் மூலம் விதையை அனுப்புகிறேன். அது என் மருமகன் பக்தாத்திலிருந்து அனுப்பியது." எனக்கூறி விட்டுச் சென்றான். மறுநாளே அவன் தன் வேலைக்காரன் மூலம் ஒரு பொட்டலத்தை கொடுத்தனுப்பினான்.

கோஹா அப்பொட்டலத்தை வாங்கி திறந்துபார்த்தான். அதில் மீன் முட்டைகள் தான் இருந்தன. அந்த பிரபு வேண்டுமென்றே தன்னை கேலி செய்ய அதை அனுப்பி இருப்பதாக கோஹா ஊகித்துக் கொண்டு விட்டான். உடனே, அந்தப் பிரபுவுக்கு நல்ல புத்திமதி கற்பிக்கத் தீர்மானித்துக் கொண்டான்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. ஒருநாள் கோஹா கடைத்தெருவுக்குச் சென்றபோது அந்தப் பிரபுவை அங்கு சந்தித்தான். உடனே, பிரபுவும் "உன் தோட்டம் எப்படி இருக்கிறது? நான் அனுப்பிய விதைகள் முளை விட்டனவா?" என்று கேட்டான். அதற்கு கோஹாவும் "எதையும் சரியான முறையில் நட்டால் ஏன் முளைக்காது? நல்ல எரு போட்டு நீர் பாய்ச்சினால் எதுவும் முளைக்காமல் போய் விடுமா? நீங்கள் அனுப்பிய விதைகள் இப்போது முளை



விட்டு வந்துள்ளது. அவற்றின் மீது வெயிலோ காற்றோ படக்கூடாது. எனவே, அவற்றை நன்கு மூடிவைத்திருக்கிறேன். நாளை என்வீட்டிற்கு வாருங்கள் பார்க்கலாம்" என்றான்.

பணக்காரனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. அவனும் அதை வெளியே காட்டாமல் "சரி நாளைக்கே வருகிறேன்" என்றான். வீடு சென்ற கோஹா தன் மகனிடம் கடையிலிருந்து வாங்கி வந்த சிறு மீன்களைக் கொடுத்து "இவற்றை நம் வீட்டு தோட்டத்தில் ஒரு பாத்தியில் தலைப்பாகம் மட்டும் தெரியும்படி புதைத்து வை" எனக் கூறினான். அவனும் தன் தந்தை கூறியபடியே செய்தான். மறுநாள் காலையிலே அந்தப் பிரபு கோஹாவின் வீட்டிற்கு வந்தான். கோஹா அவனை அழைத்துப் போய் நன்கு மூடியுள்ள ஒரு பாத்தியைக் காண்பத்து "இதில் தான் நீங்கள் கொடுத்த விதையை விதைத்தேன். முளை விட்டு வந்ததைப் பாருங்கள்." எனக் கூறினான். பிறகு, ஒரிடத்தை லேசாகவே திறந்து காட்டவே அதில் ஒரு மீன் முளைத்து வருவதுபோல இருப்பதை பிரபு கண்டான்.

பிரபுவின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. கோஹா பல இடங்களில் முன்புபோலவே செய்து காட்டவே, அங்கும் மீன்கள் முளைத்து வந்திருப்பதுபோல இருப்பதைக் கண்டான்.அப்போது அவன் கோஹாவிடம் "இதெல்லாம் நிஜந்தானா!" என்று கேட்டான்.

"அட! நீங்கள் எத்தனை பெரிய மனிதர்! உங்களிடம்



போய் பொய் சொல்வேனா? உண்மையிலே நீங்கள் பெரிய மனிதர் மட்டமல்ல! மிகவும் நல்ல மனிதருங்கூட! உங்கள் கைராசி அபாரம்! பாருங்களேன். நீங்கள் கொடுத்த விதைகள் எவ்வளவு பிரமாதமாக முளை விட்டு வளர்ந்திருக்கின்றன? அந்த மாதிரி விதைகள் மட்டும் எனக்கு கிடைத்து, ஒரு பத்து ஏக்கர் நிலமும் இருந்தால் அது நிறைய அந்த விதைகளையே விதைப்பேன்" என்றான். அதுவும் நிஜம் தான் என்று நம்பி தன் வீட்டிற்குச் சென்று தன்னுடைய பண்ணையாட்களைக் கூப்பிட்டு " இந்த வருடம் நம் நிலத்தில் எல்லாம் மீன் முட்டைகளையே விதைக்க வேண்டும்" என்று உத்தரவிட்டான். அவர்களும் தமது எஜமானின் கட்டளைப் படியே நடந்தனர்.

கோஹா இச்செய்தியை நகரத்தில் எல்லோரிடமும் சொல்ல எல்லோரும் அந்தப் பிரபுவை பார்த்து சிரிக்கலாயினர். இரண்டொரு நாட்களுக்குப் பின்னரே கோஹா தன்னை மடக்கிய சமாச்சாரம் பிரபுவுக்கு தெரிந்தது. பேசாமல் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு அந்தப் பிரபு அவமானத்தால் குன்றிப் போனான்.

## அம்புலிமாமா கதைகள்



## இதுதான் என் மதிப்பு!

ஒரு தடவை இரு அரசர்கள் பகமை பூண்டனர். ஒரு அரசன் மற்றவனை முறியடித்து, நாட்டை விட்டுத் துரத்தி விட்டான்.

மேலும், அதோடு நில்லாமல் தோற்ற அரசனது தலையைக் கொண்டு வருவோருக்கு லட்சம் வராகன்கள் பரிசளிப்பதாக நாடெங்கும் பறை சாற்றினான்.

அந்தச் சங்கதியை அறிந்ததும் தோற்றுப் போன அந்த அரசன் ஜெயித்தவனுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.

அதில் இப்படி எழுதியிருந்தது.

"நீ என் தலைக்கு லட்சம் வராகன்கள் மதிப்பீட்டு இருக்கிறாய். ஆக, என் தலைக்கு உள்ள மதிப்பை உண்மையிலேயே நீ உணர்ந்திருக்கிறாய். ஆனால், உன் இடத்தில் நான் இருந்தால், உன் தலைக்கு ஒரு தம்பிடி கூடக் கொடுக்க மாட்டேன். ஏனெனில், உன் தலைக்கு மதிப்பு ஏது? தூக்கி குப்பையில் போட வேண்டியது தானே?"

இதைப் படித்து பார்த்ததும்,வெற்றி அடைந்த மன்னன் அவமானம் அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவது படைவீரர்களுக்கு இழிவு

## ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது

வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுவது படைவீரர்களை இழிவுபடுத்தும் வகையில் அமையும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தாய் நாட்டை பாதுகாப்பதற்காக படைவீரர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை முன்னிட்டு ஹெல உறுமய கட்சியினால் முன்னர் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,சர்வதேச அழுத்தங்களின் காரணமாக வடக்கு தேர்தல்களை நடத்தினால் அது படை வீரர்களின் தியாகங்களை மலினப்படுத்தும் வகையில் அமையும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஈழத்தை வென்றிருந்தால் தமிழகத்தின் தற்போதைய முதல்வர் ஜெயலலிதா மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆகியோர் உயிரோடு இருந்திருக்க மாட்டார்கள்.

அத்துடன் சம்பந்தன், ஹக்கீம் மற்றும் அசாத் சாலி போன்றோருக்கும் அதே நிலைமையே ஏற்பட்டிருக்கும்என அவர்கூறியுள்ளார்.மேலும் அரசு யுத்தத்தில் வெற்றி பெறாதிருந்தால் அமிர்தலிங்கத்திற்கு ஏற்பட்ட நிலைமையே தற்போதைய தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கும் ஏற்பட்டிருக்கும்.

கருணாநிதி, சம்பந்தன், ஜெயலலிதா போன்றோர் யுத்த வெற்றியை திசை திருப்ப முயற்சிக்கின்றனர். யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றுவதற்கு சகல சிங்களவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டிற்கு வீண் செலவு செய்யவேண்டாம்

## சஜித் எம்.பி.அறிவுரை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுக்காக வீண் செலவுகளைச் செய்யவேண்டாமென ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

அமர்வுகளில் பங்கேற்கும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் பயணம் செய்வதற்கு அதிநவீன சொகுசு மோட்டார்க்கார்களை அரசாங்கம் கொள்வனவு செய்யவுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கூறியுள்ளார். இதன் மூலம் பாரியளவில் பொருட்செலவு ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாறாக, வாடகை அடிப்படையில் அதிசொகுசு வாகனங்களை குறித்த காலத்திற்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்றும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதனால் நாடு பாரியளவில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஊழல் மோசடிகள், வீண்விரயம், முறைகேடுகள் போன்ற காரணிகளினால் நாட்டின் பொருளாதாரம் வலுவிழந்து செல்வதாக சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# அரசியல் தீர்வு காண சீனாவின் அழுத்தம் தேவை

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் பிரச்சினைக்குதீர்வு காண்பதற்கு சீனா, இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு யதார்த்தமான முறையில் தீர்வு காண்பதற்கும் அரசியல் தீர்வு திட்டமொன்றை முன்வைப்பதற்கும் அரசாங்கம் முழு மனதுடன் முனைப்பு காட்ட சீனா அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் அழுத்தங்களை ஈடு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் சீனாவின் உதவியை நாடி வருகின்றது.

எனவே, சீன அரசாங்கத்தின் மீது இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள நம்பிக்கையை தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக் கூடிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (செ)

# கட்டுரைப் போட்டியில் மூன்றாம் இடம்

(சாவகச்சேரி)

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட மொழியும் மனித நேயமும் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் எழுது மட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலய மாணவி செல்வி டிலக்சனா பரமானந்தசோதி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வெற்றியீட்டிய மாணவிக்கு இந் நிலையத்தால் 5 ஆயிரம் ரூபா பணப்பரிசுடன் சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன . (அ-29)

# வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட அணி தெரிவு

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆண்களுக்கான தேசிய மட்ட வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட அணி தெரிவானது.

இப் போட்டி கடந்த 11 ஆம் திகதி மஹரகம இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் இடம்பெற்றது.

முதல் போட்டியில் யாழ். மாவட்ட அணி அம்பாந்தோட்டை அணியை 17:11 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வென்று காலிறுத்திக்குத் தெரிவானது.

காலிறுதி போட்டியில் யாழ். மாவட்ட அணி இரத்தினபுரி அணியை 23:11 என்னும் புள்ளிகள் கணக்கில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அரையிறுதியில் பதுளை மாவட்ட அணியை எதிர்கொண்டது. மிக விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இடம்பெற்ற இப்போட்டியில் 18:11 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியது யாழ் மாவட்ட அணி.

இதன் இறுதிப் போட்டி ஜூலை மாதம் பொலநறுவையில் இடம்பெறவுள்ள தடகள நிகழ்வின் இறுதி நாளன்று இடம்பெறவுள்ளது. இறுதிப் போட்டி யில் கேகாலை மாவட்ட அணியை யாழ். மாவட்ட அணி எதிர் கொள்ளவுள்ளது. (அ-23)




- ❖ 996 - புனித ரோமப் பேரரசின் மன்னனாக 16 வயது மூன்றாம் ஓட்டோ முடி சூடினான்.
- ❖ 1502 - போர்த்துக்கீச மாலுமி ஜொவாவோ டா நோவா புனித ஹெலெனா தீவைக் கண்டுபிடித்தார்.
- ❖ 1792 - ஜப்பானில் ஊன்சென் மலை வெடித்ததில் இடம்பெற்ற சூறாவளி மற்றும் சுனாமியினால் 14 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்தனர்.
- ❖ 1851 - கொலம்பியாவில் அடிமைத்தொழில் ஒழிக்கப்பட்டது.
- ❖ 1859 - பிக் பென் மணிக்கூடு முதன் முறையாக இயக்கப்பட்டது.
- ❖ 1864 - ரஷ்ய-கோக்கசஸ் போர் முடிவடைந்தது.
- ❖ 1871 - பிரெஞ்சு அரசுப் படைகள் பாரிஸ் கம்யூனைத் தாக்கினார். ஒரு வார முற்றுகையில் 20 ஆயிரம் கொம்யூன் மக்கள் கொல்லப்பட்டு 38 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.
- ❖ 1894 - 22 வயது பிரெஞ்சு கொடுங்கோலன் எமிலி ஹென்றி கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.
- ❖ 1904 - பாரிசில் சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (FIFA) ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1917 - அட்லாண்டாவில் இடம்பெற்ற பெருந்தீயில் பெரும் அழிவு ஏற்பட்டது.
- ❖ 1941 - இரண்டாம் உலகப் போர்: பிரேசிலில் இருந்து 950 மைல் தூரத்தில் ரொபின் மூர் என்ற அமெரிக்க போர்க் கப்பல் ஜேர்மனியின் யூ-படகினால் மூழ்கடிக்கப்பட்டது.
- ❖ 1991 - முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னைக்கருகில் மனிதக் குண்டுவெடிப்பொன்றில் கொல்லப்பட்டார்.
- ❖ 1991 - எதியோப்பியாவின் கம்யூனிச அரசுத் தலைவர் மெங்கிஸ்டு ஹைலி மரியாம் நாட்டில் இருந்து தப்பி வெளியேறினார். எதியோப்பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- ❖ 1994 - யேமன் மக்களாட்சிக் குடியரசு யேமன் குடியரசில் இருந்து விலகியது.
- ❖ 1996 - தான்சானியாவில் பூக்கோவா என்ற பயணிகள் கப்பல் மூழ்கியதில் ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.
- ❖ 1998 - 32 ஆண்டுகள் இந்தோனேசியாவை ஆண்ட சுகார்ட்டோ பதவி விலகினார்.
- ❖ 2003 -வடக்கு அல்ஜீரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்தனர்.
- ❖ 2006 - சுதுமலை புவனேஸ்வரியம்மை கொடியேற்றம்.


*பிறப்புகள்*

- ❖ கிமு 427 - பிளேட்டோ, கிரேக்கத் தத்துவவியலாளர் (இ. கிமு 347)
- ❖ 1919 - எம். என். நம்பியார், நடிகர் (இ. 2008)
- ❖ 1921-அந்திரே சாகரொவ், ரஷ்ய இயற்பியலாளர் (இ. 1989)
- ❖ 1954 - டி. பி. எஸ். ஜெயராஜ், ஊடகவியலாளர்
- ❖ 1960 - மோகன்லால், தென்னிந்திய நடிகர்
- ❖ 1972 - நொடோரியஸ் பி.ஐ.ஜி, அமெரிக்க ராப் இசைக் கலைஞர்

*இறப்புகள்*

- ❖ *1991 -ராஜீவ் காந்தி, முன்னாள் இந்தியப் பிரதமர் (பி. 1944)*
- ❖ 2000 - பார்பரா கார்ட்லண்ட், ஆங்கில நாவலாசிரியை (பி. 1901)

### *ராஜீவ் காந்தி*



ராஜீவ் காந்தி 1944 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பிறந்தார். இவரது தாயாரான பிரதமர் இந்திரா காந்தி 1984 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டதன் பின் இவர் இந்தியப் பிரதமரானார்.

இந்தியாவின் புகழ்பெற்ற அரசியல் குடும்பத்தில் பிறந்தும் அரசியல் மீது ஆர்வமில்லாது விமானம் ஓட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். தாயார் இந்திரா காந்தியால் வாரிசாக வளர்க்கப்பட்டு வந்தவரெனக் கருதப்பட்ட இவரது தம்பியான சஞ்சய் காந்தி விமான விபத்தொன்றில் காலமான பின்னர் மிகுந்த தயக்கத்துடன் வற்புறுத்தலுக்கு இணங்கி அரசியலுக்கு வந்தார்.

1981 ஆம் ஆண்டு பெப்ரவரியில் சஞ்சய் காந்தியின் தொகுதியான உத்தரப் பிரதேசத்திலுள்ள அமேதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

ராஜீவ்காந்தி இந்தியாவின் ஆறாவது பிரதமர். 41 வயதில் பதவி ஏற்றார். இவர் இந்தியாவின் மிக இளம் வயதில் பிரதமாரானவர் என்ற பெருமைக்குரியவர்.

இந்திய அமைதி காக்கும் படையினை இலங்கைக்கு அனுப்பி தமிழர்களுக்கு கூட்டாச்சி முறையிலான உரிமையை பெற்று தர முயன்றார் . 1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதியன்று தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் படுகொலை செய்யப்பட்டார். ராஜீவ் காந்தியின் நினைவிடம் ஸ்ரீபெரும்புதூரில் கட்டப்பட்டு இன்று முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. மிஷன் 90 டேஸ் (Mission 90 Days) என்ற திரைப்படம் ராஜீவின் கொலையை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வலியும் வீரமும் சுமந்த வாழ்வு!

திருமலை மாவிலாற்றிலிருந்து
வன்னியின் கிழக்கெல்லை வரை
வெந்து தணிந்தது காடுகள்.

மக்கள் கூட்டத்தின் ஈழக்கனவு
குரூரமாக தூக்கி எறியப்பட்டது.
பேரினவாதப் புயல் சுற்றிச்
சுழன்றடித்து,
முள்ளிவாய்க்காலை செந்நீரால்
மூடிக்கொண்டது.
உருட்டப்பட்ட தலைகள்,
மூடப்பட்ட பதுங்கு குழிகளின்
மேல் சிதறிக்கிடந்தன.
உமி ஊதிப் பொறுக்கியெடுத்த
அரிசி,
அதனுள் அடங்கிப்போனது.

ஆர்வத்துடன் அவசரமாக மனிதக்
கேடயம் பற்றிப்
பேசிக்கொண்டிருந்தார்கள்
பார்வையார்கள்.
கருத்துச் சுதந்திரத்தின்
வாய் கிழிந்துபோனது.
காரியம் முடிந்ததும்,
மனித உரிமை மீறல் பற்றிப்
பேசுவோமென்று
ஐ.நா.வும் அடங்கியிருந்தது.

அங்கு இறந்த மனிதர்களோடு
வாழும்
துயரம் சூழ்ந்து கொண்டது.
அந்தியேட்டி, காடாத்து
விழுமியங்கள்
நினைவில் வந்து போயின.
பறையடித்து ஊர்கூட்ட ஆட்கள்
இல்லை.
சேமக்கலம் அடித்துச் செல்லும்
இறுதி ஊர்வலம் கனவானது.
இறந்தவரின் பெருமை பேச
நேரமில்லை.
அவரோடு வாழ்ந்த நினைவுகளை
மீட்ட யாருமில்லை.

கொலைக்களத்தில் அங்கமிழந்த
மனிதர்கள் ஏராளம்.
ஒரு கணத்தில் பல இறப்புகள்.
வெறுமைக்கும் இறப்பிற்கும்
இடைவெளியற்ற
மயான பூமி.
அமரர் ஊர்திகளைக் காணவில்லை.
பேரிரைச்சலுடன் நாலாபக்கமும்
டாங்கிகள் வருகின்றன.

அனாதையாக இறப்பதன் அர்த்தம்
அங்கு எழுதப்பட்டது.
பிரிவிற்கு ஆயத்தமாக
பெருங்கூட்டம்.
எமனை நோக்கி ஓடுவதா
என்கிற பதட்டம்.
இருந்தாலும் நகர்ந்தாலும் சாவு
நிச்சயம்.
பிள்ளைகளாவது பிழைக்கட்டும்.
தம் மீதே கனத்த வெறுப்பு.

விலகிய வேலிக்கு வழக்காடியது;
வாசலில் நில் என்று அதட்டியது;
தேர்தலில் இரத்தத் திலகமிட்டது;
அறிவுக் களஞ்சியம் எரிந்தது;
மீண்டும் வீறு கொண்டெழுந்தது;
போராடிப்பெற்ற இறைமையை
இழந்தது;
எல்லாமே நெஞ்சில் நிழலாடியது.

புதுமாத்தளன் இரண்டாகப்
பிளந்தது.
இறுதிவரை கூடவந்தவர்கள்
எங்கே?
பிரிக்கப்பட்ட ஜேர்மனிபோல...
துண்டாடப்பட்ட கொரியாபோல...
அங்கு என்ன நடக்கிறது?
நினைத்து அச்சப்படவும்
நேரமில்லை.
வாழ்வின் முடிவு
எதுவென்று தெரியாமல்
ஓடிக்கொண்டிருந்தார்கள்.

கூப்பிடு தொலைவில் போர்
குறுகியது.
கடல் விளிம்பில் கண்ட
தற்கொடை,
காட்சியாய் பக்கத்தில் விரிந்தது.
காற்று மண்டலத்தை
கந்தகத்துகள்கள் அதிர்வித்தன.
இனி ஓட முடியாது.
மண் அணைக்காவல்ரண்கள்
உடைந்து,
உயிர் விழுங்கிகள்
குண்டு மழை பொழிந்தன.

தொலைபேசியில் வந்த மரணச்
செய்திகள் இறந்துபோயின.
வாழ்வும் சாவும் இனி
அவர்களோடுதான் என்று
முடிவாயிற்று.
கடல்வாசல் மூடி
கொடியும் ஏற்றிவிட்டான் எதிரி.
எறிகுண்டுகள் பிதுங்கி
எறிந்த மக்கள்
ஒற்றையடிப் பாதையில்
கொலைக்களம் நோக்கி
நகர்கின்றனர்.

பாதை எங்கும் பிணக்குவியல்.
என்னையும் கூட்டிச்
செல்லுங்களென்று கெஞ்சும்
கால்களற்ற மனிதர்கள்.
குழந்தை இறந்தது தெரியாமல்
அரவணைத்துச் செல்லும் தாய்மார்.
சொந்த மண்ணில்
தலைகுனிந்தபடியே நடந்தாலும்
அவர்களோடு இறுதிவரை
நின்றோம் என்கிற சிறிய ஆறுதல்.

இம்மாந்தரை மோசமான
அந்நியர்போல்
வரவேற்கும் ஆக்கிரமிப்பாளன்.
இந்த மண் இனி எங்கள்
சொந்த மண் என்றான் அவன்.
போராளிகளை ஏற்றிச்செல்ல
பேரூந்துகள் நின்றன.
அவர்களை அடையாளம் காட்ட
சில காக்கை வன்னியர்கள் தயார்
நிலையில்.
பிரிவோம் சந்திப்போம் என
அங்கும் ஒரு பிரியாவிடை.
கொல்வதும் உயிரோடு
வைத்திருப்பதும் உனது விருப்பம்
என்றானபின், நம்பிக்கையும் அவன்
கைகளில்தான்.

காலம் தனக்கேற்றவாறு
உருண்டோடியது.
பயங்கரவாதத் திரை போட்டு
பாதகங்கள் மறைக்கப்பட்டன.
பதுங்கு குழிகளிலிருந்து
திறந்தவெளி வதை முகாம்களில்
மக்கள்.
ஐ.நா. மூனும் வந்தது
வேடிக்கை பார்க்க.
எல்லாமே நன்றாக நடப்பதாக
உபதேசம் செய்தது.
முள்வேலிக்குள் முகாரிகள்
கேட்பதில்லை என்றது.

இப்போ... இன அழிப்பின்
பங்காளிகள்
விடுதலைக்கீதம் இசைக்கின்றார்.
கொன்றவர்கள்
தண்டிக்கப்படுவார்களென்று
நம்பச் செய்வதில் தீவிரமாகவே
இருக்கின்றார்கள்.

தீர்மானங்கள் தமக்கானதெனச்
சொல்வதில்லை.
நம்மவர்க்கும் அதனை
விழுங்குவதில் ஒரு சுகம்.

அடுத்த தீர்மானம் வரை
நீதிக்காகக் காத்திரு.
குளம் வற்றும்வரை பொறுத்திரு.
நிலம்போனாலும் மீட்பர்கள்
அதனைப் பெற்றுத்
தருவார்களென்று
நம்பிக்கை கொள்.
நீங்கள் போராடாமலே விடுதலை
வாங்கித் தரும் இரட்சகர்கள்
இவர்களென்று நம்பு.
இப்படியான தரகு மீட்பர்களின்
அடிபணிவு கீதம் பலமாகக்
கேட்கிறது.

பயணித்த பாதை
குரூரமும் வன்மமும் வஞ்சகமும்
சூழ்ச்சியும் தன் முனைப்பும்
சந்தேகமும் நிரம்பியதொரு
வாழ்வின் இருண்ட பக்கங்கள்.
அங்கு மகிழ்ச்சியும் இருந்தது
துரோகங்களுக்கும் குறைவில்லை.
துயரமும் இருந்தது
நிலம் மீட்ட நிம்மதியும் இருந்தது.

இனிவரும் காலம்
பட்டறிவின் பரிசோதனைக் களம்.
இன அழிப்பின் புதிய
பரிமாணங்கள் துல்லியமாக
வெளிப்படும் காலம்.
ஆதலால்...
இன அடியழித்தலை நிறுத்த
மக்கள் அணிதிரட்ட
உறுதி பூணுவோம் என்றென்றும்.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுகு, ஸ்ரீமுருகன் அணிகள் இறுதி ஆட்டத்திற்குத் தெரிவு

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 10 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிக்கு நெற்கொழு கழுகு, வதிரி ஸ்ரீமுருகன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

வடமராட்சியில் 32 அணிகள் பங்குபற்றிய இப்போட்டியில், அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

இதில், முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து கழுகு அணி மோதியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வை அணி 10 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

இதில்,றொசான் 12, ரஞ்சித் 8 ஓட்டங்களைப் பெற்றனர். கழுகு அணியின் பந்து வீச்சின் சாா்பில் நந்தபாலன் 4,செந்தூரன் 3, ரமேஸ், கோகுலன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கழுகு அணி 8.1 பந்துகளில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில், முரளி 20, கோகுலன், செந்தூரன் தலா 9 ஓட்டங்களைப் பெற்றனர். வல்வை அணியின் பந்து வீச்சின் சாா்பில் ஜெகன், றொசான் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கூவில் தீபஜோதி அணியை எதிர்த்து வதிரி ஸ்ரீமுருகன் அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தீபஜோதி அணி 10 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் புருசோத் 25, தீபன், ரூபன் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்ரீமுருகன் அணியின் பந்துவீச்சின் சாா்பில் சஜீவன் டேஸ்மன், ராஜ், தலா 2, தர்சன், சசி, சதீஸ் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீமுருகன் அணி விறுவிறுப்பான கட்டத்தில் ஒரு பந்து மிகுதியிருக்க ஒரு விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

இதில் தர்சன் 25, பவன் 15, சுஜீவன் 14, ராஜ் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

தீபஜோதி அணியின் பந்துவீச்சின் சாா்பில் சுதர்சன் 3, பிரதீபன், புருசோத் தலா 2, மோகன் ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இறுதியில் கழுகு, ஸ்ரீமுருகன் அணிகள் இறுதியாட்டத்திற்கு தெரிவாகின. (அ-24)

## வடமாகாண அதிபர்கள் சங்க பொதுக்கூட்டம்

வடமாகாண அதிபர்கள் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின்போது வடமாகாண கல்வி நிலைமைகள் பற்றிய கலந்துரையாடலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் வடமாகாணத்திலுள்ள அனைத்து தரம் பெற்ற அதிபர்களையும் கலந்துரையாடலிலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண் அதிபர்கள் சங்க செயலாளர் அ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (அ)

# தேசிய அ.அட்டை வழங்க பவ்ரல் அமைப்பு முடிவு

வடக்கில் 17 வீதமானவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் இல்லை எனச் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வடக்கில் மாகாணசபைத்தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பிரதேசமக்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க பவ்ரல் அமைப்பு தீர்மானித்துள்ளது.

தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்களுக்கு அடையாள அட்டைகளை விநியோகிக்கும் விசேட திட்டமொன்றை ஆட்பதிவுத் திணைக்களத்துடன் இணைந்து பவ்ரல் அமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் நான்கு நாட்கள் விசேட நடமாடும் சேவையொன்றின் மூல மாக தேசிய அடையாள அட்டை விநியோகம் நடைபெறவுள்ளது. (அ-2)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொருத்தமான தலைவர்

## ஜனாதிபதியை புகழ்கிறார் அசாத்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என தமிழ், முஸ்லிம் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மிகவும் பொருத்தமான தலைவர் ஜனாதிபதி தான் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினராலேயே பல்லின மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனரெனவும் ஜனாதிபதியால் இலகுவில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தான் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக் கப்பட்ட தருணத்தில் தம்மை விடுதலை செய்வதற்கு அர்ப்பணிப்புடன் முயற்சி மேற் கொண்ட ஆளும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்ளிட்ட அனனவருக்கும் நன்றி பாராட்டுவதாகவும் அசாத் தெரிவித்துள்ளார். (அ-2)

# பிக்குகள் பொறுமையுடன் செயற்பட வேண்டும்

## பிரதமர் அறிவுரை

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் மிகவும் பொறுமையுடன் செயற்பட வேண்டுமென பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

களனியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் வேற்று மதங்களுடன் மோதல்களை ஏற்படுத்திக்கொள்ள் முயற்சிக்கின்றனர். இதனால் நாட்டின் பெரும்பான்மை இனத்திற்கு அதிக அழிவு ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை பௌத்த மகாநாயக்க தேரர்கள் புரிந்துகொள்ளவேண்டும். பௌத்த மதத் தலைவர்கள் பொறுமையுடனும் புத்திசாலித்தனத்துடனும் செயற்படவேண்டும்.

மக்களின் மனதுகளை வென்றெடுக்கக் கூடிய மதத் தலைவர்கள் இல்லையாயின் எத்தனை பெரிய விகாரைகளை அமைக்கினும் அவற்றால் பயன் எதுவும் கிடையாது எனப் பிரதமர் வலியுறுத்தினார். (அ-2)

# அமைதிப் போராட்டத்திற்கு இடமளிக்க வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

அமைதியான போராட்டங்களுக்கு இடமளிக்க வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக பொதுமக்களும் தொழிற்சங்கங்களும் போராட்டங்களில் ஈடுபடவுள்ளன.

போராட்டத்தில் ஈடுபடுவோர் நீதியான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அதேவேளை கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கும் இடமளிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராக இன்று பாரியளவில் போராட்டமென்றை இல ங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன் னெடுக்கின்றது.

மின்சாரக் கட்டண உயர்வானது மக்கள் பிரச்சினை என்பதால் மக்கள் அமைதியான முறையில் தங்களது கருத்துக்களை வெளியிட அனுமதியளிக்க வேண்டும். அரசியல் அமைப்பின் பிரகாரம் அமைதியான முறையில் போராட்டம் நடத்த இடமளிக்க வேண்டுமென சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, இப்போராட்டம் நிச்சயமாக இன்று நடத்தப்படும் என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

எவ்வாறான தடைகள், எதிர்ப்புகள் வந்தாலும் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தை குறைக்குமாறு கோரி போராட்டம் நடத்தப்படும். இந்தப் போராட்டத்திற்கு ஒரு தரப்பினர் ஆதரவளிக்கின்றனர், ஏனைய தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இது சாதாரணமான விடயமாகும். பெரும்பான்மையானவர்கள் போராட்டத்திற்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக பாரியளவில் போராட்டங்கள். தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கனடாவின் நகர்வுகள் குறித்து கண்காணித்து வருகின்றோம்

## வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

கனடாவின் நகர்வுகள் தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் கனடா நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதா என்பது குறித்து கவனிக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் நடத்தப்படுவது குறித்து கனடாவும் பஹாமாஸும் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டின் உண்மையான நிலைமைகள் குறித்து அந்தந்த நாடுகளுக்கு தெளிவுபடுத்துமாறு வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)



கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் தொழிற்பயிற்சிகள் தொடர்பில் ஆராயவும் கைத்தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் கிளி. மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோது... (படம்: றெட்பானா செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்போருக்கு பல்கலைக்கழக வாய்ப்பு

## கல்வி அமைச்சர் பந்துல



(கொழும்பு)

**க.பொ.த உயர்தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்ப பாடத்திட்டத்தை தேர்ந்தெடுக்கும் மாணவர்களுள் ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுமென கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

இதனடிப்படையில் இவ்வருடம் முதல் க.பொ.த உயர்தரத்தில் தகவல் தொழிநுட்பத்தைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு தொடர்ச்சியாக வழங்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்பாடத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெறும் மாணவர்கள் இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்ழகங்களிலும் பி-டெக் பட்டப்படிப்பை தொடர முடியுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சனிக்கிழமை உயர் கல்வியமைச்சில் நடைபெற்ற பயிற்சி பட்டறையொன்றின்போது உயர்கல்வி அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக கல்வியமைச்சிடம் உறுதியளித்துள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் இரண்டு வருட காலத்திற்குள் பல்கலைக்கழகங்களில் பி- டெக் பட்டப்படிப்பை அறிமுகப்படுத்துவதற்கான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் உயர் கல்வியமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

சில பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பத்துக்கென புதிதாக பீடங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் சில பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான பீடம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடமாக மாற்றியமைக்கப்படவுள்ளது. பி- டெக் பட்டப்படிப்பை தொடருவதற்கு ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் 100 க்கும் அதிகமான மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது .

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களில் தனித்தனியே 100 க்கும் அதிகமான மாணவர்கள் தமிழ்மொழியில் இப்பட்டப்படிப்பை தொடர முடியும்.

மேலும் இவ்வாறான பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெறாத மாணவர்கள் இளைஞர் மற்றும் திறன் அபிவிருத்தியமைச்சின் கீழ் நிறுவப்படும் 25 திறன் அபிவிருத்திக் கல்லூரிகளின் கீழ் பயிற்சி பெறமுடியும் எனவும் இதில் முதற்கட்டமாக 200 பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பம் க.பொ.த உயர்தரத்தில் ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உயர்தரப் பரீட்சையின் போது வினாத்தாள் மதிப்பீட்டிற்கு 75 புள்ளிகள் மாத்திரமே வழங்கப்படுமெனக் கூறிய அமைச்சர் மிகுதி 25 புள்ளிகளும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முன் னெடுக்கப்படும் செயற்பாட்டுப் பரீட்சையின் போது வழங்கப்படுமெனவும் குறிப்பிட்டார். (அ-5)

# வணிகமும் கணக்கியலும் பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் தமிழ் மொழி மூலமாக வணிகமும் கணக்கியலும் பாடநெறியை மேற்கொள்வதற்கென விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளதாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் மேற்படி நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. (அ-5)

# யுத்த அழிவுகள் கணக்கெடுப்பு; புள்ளிவிபரவியல் திணைக்களம் முடிவு

(கொழும்பு)

மூன்று தசாப்த யுத்தத்தின் போது ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் கணக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய, இந்த கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் டி.சி. குணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தக் கணக்கெடுப்பு தொடர்பான அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்க எண்ணியுள்ளதாக கூறினார்.

இலங்கையில் யுத்த சூழலில் ஏற்பட்ட மரணங்கள், இடப்பெயர்வுகள் காணாமற் போதல் மற்றும் சொத்துக்களுக்கு ஏற் பட்ட சேதங்கள் குறித்து இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

நடவடிக்கை குழுவொன்றின் ஊடாக வினாகோவையொன்றைத் தயாரித்து அடுத்த மாதம் கணக்கெடுப்பை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இதன்போது நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்று தகவல்களை திரட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அலுவலர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கிராம அலுவலர்களைக் கணக்கெடுப்பு அதிகாரிகளாக பயன்படுத்தி இந்த கணக்கெடுப்பை வெற்றிகரமாக முன்னெடுக்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வெளிநாட்டில் 10 இலங்கையர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது

வெளிநாடுகளிலுள்ள பத்து பேருக்கு மரண் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களை இத்தண்டனையில் இருந்து மீட்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுக்க முடியாது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டு நீதிமன்றினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட பத்து இலங்கையர்கள் வெளி நாடுகளில் வாழ்ந்து வருவதாக அமைச்சர் டிலான் பெரேராவை மேற்கோள்காட்டி இலங்கையர்கள் வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கொலைக் குற்றவாளிகளும் அடங்குவதாக அப்பணியகம் குறிப்பிட்டுள்ளது.

டுபாய், அபுதாபி, கட்டார் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் வாழும் 10 இலங்கையர்கள் இந்த மரண தண்டனைக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களை இத் தண்டனையிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுக்க முடியாது என்பதுடன் எந்தவொரு நாட்டின் நீதித்துறைக்கு எதிராக பிறிதொரு நாட்டின் அரசு நடவடி க்கை எடுக்க முடியாதெனவும் எவ்வாறாயினும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை அதிலிருந்து மீட்கும் பொருட்டு வெளி விவகார அமைச்சையோ அல்லது வேறு ஏதும் அமைப்புக்களின் உதவியையோ நாடவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# துடுப்பாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

அமரர் க.பார்த்தீபன் ஞாபகார்த்தமாக கேவிகே சமூக சேவை அமைப்பினால் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்படும் அணிக்கு 7 பேர் 7 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்று போட்டி எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் பருத்தித்துறை, தும்பளை விவேகானந்தா விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபெற விரும்பும் கழகங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. காலிறுதியிலிருந்து அணிக்கு 9 பேர் 10ஓவர்கள் கொண்டதாக போட்டிகள் இடம் பெறும்.

பிரதேச ரீதியாக வட்டுக்கோட்டை- 0774405977, இருபாலை-0776660263, பருத்தித்துறை -0773760604 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு நுழைவுக்கட்டணத்தை செலுத்தி வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)







E-Soft நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். [illegible] வித்தியாசாலைக்கு கற்றல் உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், [illegible] அணிக்கான பாதணிகள் உட்பட பல உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் மாணவர்களுக்கான உதவிப் பொருட்கள் வழங்கப்படுவதையும் உதவிகள் பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்வெளிக்கு சென்று வந்தன எலிகள், பல்லிகள்



எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்துக்கு மனிதனை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டுள்ளது. அது சாத்தியமா? என்பதை அறிய தற்போது விண்வெளிக்கு உயிரினங்களை அனுப்பி ஆய்வு மேற்கொண்டு வருகிறது. அதன் முதல் கட்டமாக பியான்-எம். என்ற விண்கலத்தில் 45 எலிகள், 15 பல்லிகள், நத்தைகள் மற்றும் தாவரங்களை வைத்து கடந்த மாதம் (ஏப்ரல்) விண்ணுக்கு அனுப்பியது.

அந்த விண்கலம் பூமியில் இருந்து 575 கி.மீற்றர் தூரத்தில் விண்வெளியில் ஒரு மாதமாக நிலை நிறுத்தப்பட்டிருந்தது. ஆய்வு முடிந்த நிலையில் ஓரன்பர்க் மாகாணத்தில் அது தரை இறக்கப்பட்டது.

அதில் எலிகள், பல்லிகள் மற்றும் நத்தைகளில் பெரும்பாலானவை உயிருடன் இருந்தன. விண்வெளிக்கு சென்றதும் உடல் எடை குறைந்த நிலையிலும் உடல் உறுப்புகள் பணிபுரியும் தன்மை குறித்து ஆராய இந்த பரிசோதனை நடத்தப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் மூலம் ரஷ்யா நடத்தியுள்ள இந்த பரிசோதனை தனிச்சிறப்பு வாய்ந்ததாக அந்நாட்டு பத்திரிகைகள் பாராட்டு தெரிவித்துள்ளன.

## நவாஸ் செரிப் பதவியேற்க முன் முஷாரப்

# நாடு கடத்தப்படலாம்?



பாகிஸ்தானில் பிரதமராக பதவியேற்பதற்கு முன் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை நாடு கடத்த வேண்டும் என நவாஸ செரிப விரும்புவதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சமீபத்தில் நடந்த பாகிஸ்தான் தேர்தலில் முஸ்லிம் லீக் (என்) கட்சி அமோக வெற்றி பெற்றது. இந்நிலையில் அக்கட்சி தலைவர் நவாஸ்செரீப் எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி பிரதமராக பதவி ஏற்கின்றார். அப்போது தனது எதிரியான முஷாரப் பாகிஸ்தானில் இருக்கக்கூடாது. அவரை மீண்டும் நாடு கடத்த வேண்டும் என நவாஸ் செரிப் விரும்புவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நவாஸ் செரப் பிரதமராக இருந்த போது முஷாரப் இராணுவ தலைமை தளபதி ஆக இருந்தார். அப்போது, இராணுவ புரட்சி மூலம் நவாஸ் செரீப்பிடம் இருந்து ஆட்சியை கைப பற்றினார்.

பின்னர் ஜனாதிபதி ஆனவுடன் நவாஸ் செரிப் மற்றும் பெனாசீர் பூட்டோவை நாட்டை விட்டு வெளியேற்றினார். இந்த நிலையில், கடந்த தேர்தலில் பெனாசீர் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்ததை தொடர்ந்து முஷாரப் நாடு கடத்தப்பட்டார்.

தேர்தல் அறிவித்ததை தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற பாகிஸ்தான் திரும்பினார். ஆனால், அவரது கனவு பலிக்கவில்லை. தேர்தலில் போட்டியிட அவருக்கு தேர்தல் கமிஷன் தடை விதித்தது. மேலும் பெனாசீர் கொலை வழக்கு உள்ளிட்ட பல வழக்குகளில் கைதாகி சிறைக் காவலில் உள்ளார். இந்த நிலையில் அவர் தொடர்ந்து பாகிஸ்தானில் இருப்பது நவாஸ் செரிப்புக்கு பிடிக்கவில்லை. எனவே, தான் பிரதமர் பதவி ஏற்கும் முன் முஷரப்பை மீண்டும் நாடு கடத்த திட்டமிட்டுள்ளார். அதற்காக தனது கட்சி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

நாடு கடத்துவது குறித்த தனது முடிவை சமீபத்தில் தன்னை சந்தித்த இராணுவ தலைமை தளபதி ஜெனரல் அஷ்பாப் பர்வேஸ் கயானி மூலம் முஷாரப்பிடம் தெரிவித்துள்ளதாக பாகிஸ்தான் பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ளது.

## எவரெஸ்டை தொட்ட முதல் அரபு நாட்டவர்

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் ஏறி சவுதி அரேபிய பெண் வரலாற்றில் இடம் பிடித்துள்ளார். சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரைச் சேர்ந்த ரஹா மொஹாரக் (25) டுபாயில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகிறார். இவர் பெண்களுக்கு கட்டுப்பாடுகள் அதிகம் உள்ள நாட்டிலிருந்து எவரெஸ்ட் சிகரத்தை தொட்ட முதல் பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். அதுமட்டுமின்றி மிகக குறைந்த வயதில் எவரெஸ்ட் ஏறிய அரபு நாட்டவர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இவருடைய குழு



வில் 4 பேர் இடம் பெற்றிருந்தனர்.

நேபாள மக்களின் கல்வி திட்டத்துக்காக ரூ.550 இலட்சம் திரட்ட மொஹாரக் திட்டமிட்டுள்ளார். "எவரெஸ்ட் சிகரம் ஏறுவதை விட என் பெற்றோரிடமிருந்து அனுமதி வாங்குவதுதான் சிரமமாக இருந்தது. முதன்முதலில் எவரெஸ்ட் ஏறியது குறித்து நான் பெருமைபட்டுக் கொள்ளவில்லை. இரண்டாவதாக ஒருவர் எவரெஸ்ட் ஏறும் வரை தான் இந்த பெருமை நிலைக்கும் என்று தனது இணையத் தள பக்கத்தில் மொஹாரக் தெரிவித்துள்ளார்.

## சுவாசிலாந்து மன்னன் கரம்பிடிக்கவிருந்த

# 14 ஆவது மனைவி தப்பியோட்டம்







சுவாசிலாந்து மன்னர் என்னை 14ஆவது மனைவியாக்க துடிக்கிறார், எனக்கு புகலிடம் தாருங்கள் என்று பிரிட்டனில் தஞ்சமடைந்துள்ளார் நகோபெனி.

ஆபிரிக்க கண்டத்தின் தென் பகுதியில் சுவாசிலாந்து என்ற நாடு உள்ளது. அதன் மன்னராக 3ஆவது மெஸ்வதி இருந்து வருகிறார். வருடம் ஒரு பெண்ணை திருமணம் செய்ய இவருக்கு அந்த நாட்டின் அரசியல் சட்டம் உரிமை அளித்துள்ளது. அதன்படி 45 வயதான அவர் இதுவரை தான் விரும்பிய 13 பெண்களை திருணம் செய்துள்ளார்.

அவர்கள் மூலம் 27 குழந்தைகளை பெற்றுள்ளார். கடந்த ஆண்டு கூட இவரது 6ஆவது மனைவி தப்பி ஓடிவிட்டார். இந்த நிலையில் டின்ஸ்வாலோ கோபெனி என்ற இளம் பெண்ணை சமீபத்தில் 14ஆவது மனைவியாக மன்னர் திருமணம் செய்ய இருந்தார்.

இந்த நிலையில் இவரும் சுவாசிலாந்து மன்னரை விட்டு ஓடிவிட்டார். தற்போது லண்டனில் தஞ்சம் அடைந்து பர்மிங்காமில் தங்கியுள்ளார். இதுகுறித்து அவர் கூறும் போது, "மன்னரை திருமணம் செய்வதன் மூலம் மண வாழ்க்கையில் பல கொடூரங்கள் மற்றும் கொடுமைகளை சந்திக்க நேரிடும்..

அரண்மனையில் மன்னர் தனது மனைவிகளை பாது காவலர்களின் பாதுகாப்பில்தான் வைத்திருபபார். அவரது அனுமதி இன்றி யாரும் எங்கும் வெளியே செல்ல முடியாது. அதுபோன்ற அடிமை வாழ்க்கை எனக்கு பிடிக்கவில்லை. இந்நிலையில் ஒரு தனியார் பாடசாலையில் தங்கி படிக்க எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதை பயன்படுத்தி அங்கிருந்து நான் தப்பி விட்டேன் என்றார்.

## சந்திரனுடன் மோதியது விண்கல்

விண்கல் மோதியதில் சந்திரனில் பெரும் பள்ளம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா தெரிவித்துள்ளது.

சிறிய அளவிலான பாறை போன்ற விண்கல் கடந்த மார்ச் 17ஆம் திகதி நிலவில் மோதியது. அப்போது, இதுவரை பார்த்திராத அளவுக்கு அதிகளவு வெளிச்சம் உண்டானது என்று விண்கற்கள் ஆராய்ச்சியாளர் பில் குக் தெரிவித்தார்.

சந்திரனில் மோதிய விண்கல் 40 கிலோ அளவுக்கு எடை கொண்டதாகவும், 0.3 முதல் 0.4 மீற்றர் நீளம் கொண்டதாகவும் இருந்தது. அது, மணிக்கு 90123 கிலோ மீற்றர் வேகத்தில் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏவுகணைச் சோதனைக்கு ஐ.நா.கண்டனம்

வடகொரியா நேற்றுமுன்தினம் குறைந்த தூர ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியது.

இதற்கு ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கிமூன் கவலை தெரிவித்தார். இது குறித்து ரஷ்ய செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், 'வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியது மிகவும் கவலை தருகிறது. இனி இது போன்ற செயலில் ஈடுபட மாட்டார்கள் என நம்புகிறேன்' என்று குறிப்பிட்டார்.

# 4 சிறுநீரகங்களுடன் பிரிட்டன் பெண்



பிரிட்டனைச் சேர்ந்த ஜெஸ்சிகா கர்பே (வயது 20) என்பவருக்கு 4 சிறுநீரகங்கள் உள்ளதாக அறுவை சிகிச்சையின்போது மருத்துவர்களால் கண்டறியப்படடுள்ளது.

வயிற்றின் வலது பகுதியில் கடுமையான வலி ஏற்பட்டதால் அவர வைத்தியரைச் சந்தித்துள்ளார்.

அப்போது சிறுநீர் பரிசோதனை நடத்தப்பட்டதில் சிறுநீர் தொற்று நோய் இருப்பது தெரிய வந்தது. அதற்குரிய மருந்து மாத்திரைகள் அவருக்கு வழாங்கப்பட்டு வந்தாலும் நோய் குணமாகவில்லை.

இதனால், அவருக்கு சிறுநீரகம் பரிசோதனை. செய்யப்பட்டது. அப்போது அவர் வலதுபுற சிறுநீரகத்துடன் 7 செ.மீற்றர் கட்டி இருப்பதை வைத்தியர்கள் பார்த்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து 11 நாட்கள் கழித்து மீண்டும் பரிசோதனைகள் நடத்தப்பட்டது. அதில், அவருக்கு வலப்புறத்தில் 2 சிறுநீரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அறுவைசிகிச்சை செய்து அவற்றுடன் வளர்ந்த கட்டிகள் அகற்றப்பட்டன. இதற்கிடையே, அறுவை சிகிச்சையின் போது இடது புறத்தில் மேலும் 2 சிறுநீரகங்கள் இருப்பது தெரியவந்தது. இதன் மூலம் ஜெஸ்சிகாவின் உடலில் 4 சிறுநீரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோன்று 4 சிறுநீரகங்களுடன் ஒரு மனிதன் உயிர் வாழ்வது மிகப்பெரிய வரப் பிரசாதம் என்று வைத்தியாகள் தெரிவித்துள்ளனர்.



வத்திக்கான் நகரில் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடைபெற்ற பேரணியில் குழந்தைகளுக்கு ஆசி வழங்கினார் போப் பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப்பிரதமரை வலியுறுத்தினார் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்



(புதுடில்லி)

எல்லைப் பகுதியில் அமைதி குலைந்தால் இரு தரப்பு உறவுகளும் பாதிக்கப்படும் எனச் சீனப் பிரதமர் லீ கெகியாங்கிடம் பிரதமர் மன்மோகன் சிங் கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

சீனப் பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் லீ கெகியாங் முதல் வெளி நாட்டுப் பயணமாக நேற்று முன் தினம் டில்லி வந்தடைந்தார். மூன்று நாட்கள் பயணமாக வந்துள்ள அவர் அன்றையதினம் பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது கடந்த மாதம் சீன இராணுவம் ஜம்மு காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் இந்திய இராணுவ எல்லைக்குள் ஊடுருவியமை குறித்து சீனப் பிரதமரிடம் தனது கவலையை பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

சீனா திட்டமிட்டுள்ளபடி எல்லைப் பாதுகாப்பு ஒப்பந்தம் கொண்டு வருவது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படுகிறது. இருநாடுகளுக்கிடையேயும் நல்லுறவு நீடிப்பதற்கு எல்லைப் பகுதியில் அமைதி நிலவ வேண்டியது மிகவும் அவசியம் எனச் சீனப் பிரதமரிடம் மன்மோகன்சிங் இதன்போது வலியுறுத்தினார். எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடுப்பகுதியில் பதற்றம் நிலவினால் அமைதி குலைந்து இரு தரப்பு உறவுகளும் பாதிக்கப்படும் எனவும் உறுதிபடக் கூறினார்.

இருநாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவு குறைவடைந்துள்ளமை குறித்தும் பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே 3 தடுப்பணைகள் கட்ட சீனா திட்டமிட்டிருப்பது குறித்தும் சீனப் பிரதமரிடம் கவலை தெரிவித்த மன்மோகன்சிங் இவற்றுக்குத் தீர்வுகள் வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

இரு தலைவர்களின் சந்திப்பின் போது இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளியுறவுத்துறைச் செயலாளர் ரஞ்சன் மத்தாய், இந்தியாவுக்கான சீனத் தூதர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோர் உடன் இருந்தனர். இது போல், சீனத்தரப்பிலும் முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை, மன்மோகன், லீ முன்னிலையில் இந்தியா- சீனா இடையே 8 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இவ் ஒப்பந்தங்கள் டில்லியில் உள்ள ஐதராபாத் மாளிகையில் கையெழுத்தாகின.

இதன்பிரகாரம் மானசரோவர் யாத்திரை தொடர்பாக இந்திய -சீனா இடையே கடற்பொருள், உணவுப் பொருள், வர்த்தகம் தொடர் பான ஒப்பந்தங்களும் நீர் மேலாண்மை, பசனத்துறை தொடர்பான மற்றொரு ஒப்பந்தமும் கைச்சாத்தாகியது. மேலும் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மும்பை பயணம்

உலக விவகாரங்களுக்கான இந்தியக் குழுவில் பல்கலைக்கழக மாணவர்களிடையே சீனப்பிரதமர் இன்று உரையாற்றவுள்ளார்.

துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

அதைத்தொடர்ந்து, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியைச் சந்திக்கிறார். அத்துடன் டில்லிப் பயணத்தை முடித்துக்கொண்டு மும்பை புறப்படுவார். மும்பையில் மராட்டிய முதல மைச்சர் பிரிதிவிராஜ் சவானுடன் லீ பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (அ-2)

# எல்லைப்புற வர்த்தகம்

(உத்தரகண்ட்)

இந்தியா- சீனா நாடுகளுக்கு இடையில் இந்த ஆண்டுக்கான எல்லை வழியிலான வர்த்தகம் இமயமலையில் அமைந்துள்ள லிபுலேக் கணவாய் வழியாக எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப்புற வர்த்தகத்துக்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் உத்தரகண்ட் மாநிலத்தின் பிதோராகர் மாவட்ட ஆட்சியர் சி.எம்.எஸ்.பிஷ்ட் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் பின் பிஷ்ட் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இந்தியா- சீனா இடையில் இவ்வாண்டுக்கான எல்லை வழியிலான வர்த்தகம் இமயமலையில் அமைந்துள்ள லிபுலேக் கணவாய் வழியாக ஜூனில் ஆரம்பமாகவுள்ளது.

ஐந்து மாதங்களுக்கு இடம்பெறவுள்ள இந்த வர்த்தகத்தின்போது வர்த்தகர்கள் சந்திக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு அரசுத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் ஒருவார முகாம் ஒன்றை ஜூன் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. (அ-2)

# தனி தெலுங்கானா அமைக்க காங்கிரஸ் எம்.பிக்கள் கெடு

(ஐதராபாத்)

தெலுங்கானா தனிமாநிலம் அமைக்க காங்கிரஸ் எம்.பிக்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் இறுதி கெடு விதித்துள்ளனர். இல்லாதுவிடின் கட்சியில் இருந்து விலகுவோம் என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பி.சி.சாக்கோ அண்மையில் அளித்த பேட்டியில், தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பது ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் செயற்றிட்டத்தில் இடம்பெறவில்லை என்று கூறியிருந்தார். இதுபெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் நேற்று முன்தினம் ஐதராபாத்தில் அவசர ஆலோசனை நடத்தினர். கூட்டத்துக்கு கட்சியின் மூத்த தலைவர் கேசவராவ் தலைமை வகித்தார்.

இதில் மக்களவை பாராளுமன்ற உறுப்பினர்களான விவேக், ஜெகநாதம், ராஜய்யா ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சாங்கோவின் பேட்டிக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தனி மாநிலம் விவகாரம் தொடர்பாக கட்சித் தலைமைக்கும் மத்திய அரசுக்கும் இறுதிக்கெடு விதிக்க கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பின்னர் ஜெகநாதம் எம்.பி. அளித்த பேட்டியில்,

தெலுங்கானா பகுதி மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில், பி.சி.சாக்கோ பொறுப்பற்ற முறையில் பேட்டி அளித்துள்ளார். தனது போட்டிக்காக சாக்கோ வருத்தம் தெரிவிக்க வேண்டும். தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பது தொடர்பான சாதகமான முடிவை மத்திய அரசு எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டும். இதுவரை பலமுறை கெடுவிதித்த போதும் இந்த முறை நாங்கள் பின் வாங்கமாட்டோம்.


இதுதான் நாங்கள் விதிக்கும் இறுதிக் கெடு. தனி தெலுங்கானா அமையாவிட்டால் நாங்கள் காங்கிரஸில் இருந்து விலகி தெலுங்கானா அமைப்பில் சேருவோம் என அவர் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களும் காங்கிரஸில் இருந்து விலகி தெலுங்கானா ராஷ்டிரிய சமித்தியில் சேருவார்கள் என்று அவர்களது ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே பி.சி.சாக்கோவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐதராபாத்தில் காங்கிரஸ் அலுவலகத்தை முற்றுகையிட உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் முயற்சி செய்தனர். அவர்கள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் உருவ பொம்மையை தீ வைத்து எரித்தனர். அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இதற்கிடையே பி.சி. சாக்கோ நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

தெலுங்கானா விவகாரம் பற்றி நான் கூறியது ஊடகங்களில் தவறாக வெளிவந்துள்ளது. தெலுங்கானா மாநிலம் அமைப்பது ஐ.மு. கூட்டணியின் செயற்றிட்டத்தில் இடம் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)




# சீன பிரதமரின் இந்திய விஜயத்திற்கு திபெத் அமைப்புக்கள் கடும் எதிர்ப்பு

சீனப் பிரதமர் லீ கெகியாங்கின் இந்திய சுற்றுப் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரு நாட்களுக்கு தொடர் போராட்டங்களை நடத்த இருப்பதாக திபெத் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

இந்நிலையில் இவரது இந்திய சுற்றுப் பயணத்தைக் கண்டித்து டில்லியில் உள்ள சீன தூதரகத்துக்கு வெளியே கடந்த ஞாயிற்றுக் கிழமை திபெத்தியர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து டில்லியில் பொலிஸார் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். சீனப் பிரதமர் தங்கியுள்ள ஹோட்டல் மற்றும் சீன தூதரகத்தில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



டில்லி மெட்ரோ புகையிரத நிலையம் அருகே திபெத்தியர்கள் போராட்டம் நடத்த வாய்ப்பு [illegible] தால் காலை 8 மணி முதல் 10 மணி வரை 4 மெட்ரோ புகையிரத நிலையங்களும் மூடப்பட்டன. லீ கெகியாங் அவருடன் பயணித்த குழுவினரின் பயணத்திட்டங்களுக்கு ஏற்ப போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

திபெத்தை சீனா ஆக்கிரமித்து அடிமைப்படுத்தி வைத்திருப்பதாக குற்றம் சாட்டி அந்நாட்டு மக்கள் பல ஆண்டுகளாக சுதந்திரம் வேண்டி போராடி வருகின்றனர்.

ஆனால், திபெத் தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்று சீனா திட்டவட்டமாகக் கூறி வருகின்றது.

இந்நிலையில், சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திபெத்தில் இளைஞர்கள் தீக்குளிப்பது போன்ற அசம்பாவிதங்களும் அவ்வப் போது நிகழ்ந்து வருகின்றன. இந்தியாவிலும் இதுபோன்ற போராட்டம் நடைபெற்று விடக் கூடாது என்ற நோக்கில் பொலிஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும்
மேகமேனியனும் வெல்லாமல் செல்லுக பாவம்,
பொய்மொழி, கோபம்... *- வில்லி பாரதம்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அறக் கடவுளை போக விடாதீர்கள்

மன்னன் ஒருவன் தன் நாட்டை நீதியும் தருமமும் தவறாமல் ஆட்சி செய்தான். அதனால் அவனது நாட்டில் வீரமும் செல்வமும் கல்வியும் விளைந்தன.

ஒருநாள் மன்னன் அரண்மனையில் இருக்கும் போது வீரத்திற்கு அதிபதியான துர்க்கா தேவிவருகிறாள்.

மன்னா! இதுகாறும் உனது நாட்டிலிருந்து விட்டேன். இனி நான் இந்த நாட்டைவிட்டு வெளியேறப்போகின்றேன் என்றாள்.

மன்னனோ, தாயே இவ்வளவு காலமும் எங்கள் நாட்டில் வீற்றிருந்து, வீரம் விளைந்து நிற்க உதவி செய்த உங்களுக்கு நன்றி எனக் கூறி விடை பகர, துர்க்கை வெளியேறினாள்.

துர்க்காதேவியைத் தொடர்ந்து செல்வத்திற்கு அதிபதியான இலக்குமி தேவி மன்னனிடம் வந்து, மன்னா! நானும் இந்த நாட்டை விட்டு வெளியேற முடிபு செய்து விட்டேன் என்றாள்.

மன்னனோ மகாலட்சுமியே! நீவிர் இது காறும் எங்கள் நாட்டில் இருந்தமைக்கு கோடான கோடி நன்றி என்று கூறி விடை, கொடுத்தான்.

துர்க்கை, இலட்சுமி என இருவரும் வெளியேற கல்விக்கு அதிபதியான சரஸ்வதி மன்னனிடம் சென்று தானும் வெளியேறுவதாகக் கூறினாள்.

மன்னன் செய்ந்நன்றி பாராட்டி சரஸ்வதி தாய்க்கு விடைகொடுத்தான்.

துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் வெளியேற இப்போது அறக்கடவுள் மன்னனிடம் வருகிறார். மன்னா! நானும் இந்த நாட்டை விட்டு வெளி யேறப் போகின்றேன் என்றார் அவர்.

மன்னன் அறக்கடவுளைப் பார்த்து சுவாமி தங்களுக்கு என் பணிவான வணக்கம். இந்த நாட்டை விட்டு துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் வெளியேறிய போது அவர் களுக்கு அனுமதி கொடுத்தேன்.

ஆனால் அறக்கடவுளாகிய தாங்கள் வெளியேறுவதற்கு நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்.

தர்மம் இல்லாத ஆட்சி நரகத்திற்குச் சமன். தர்மம் ஒன்று தான் எங்களைக் காக்கவல்லது.

வீரமும் செல்வமும் கல்வியும் எங்கள் வாழ்க்கையின் அடிப்படை. ஆனால் தர்மம் எங்கள் வாழ்வின் கவசம். கவசத்தை இழந்தால் வாழ்வு எங்ஙனம் சாத்தியமாகும்?

ஆகையால், உங்களைப் போகவிடமாட்டேன் என்று மன்னன் மன்றாடினான்.

மன்னனின் வேண்டுதலை ஏற்ற அறக்கடவுள் மீண்டும் அரண்மனைக்குள் செல்கிறார். என்னே அதிசயம்! அறக்கடவுள் அரண்மனைக்குள் சென்றதும் ஏற்கெனவே நாட்டை விட்டு வெளியேறியிருந்த துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் அரண்மனைக்குள் வருகிறார்கள்.

மன்னன் அதிசயித்தான். முத்தேவிகளே! விடைபெற்றுச் சென்ற நீங்கள் மீண்டும் திரும்பி வருவதன் காரணம் யாதோ! என வினவினான். அதற்கு, முத்தேவிகளும் கூட்டாகப் பதிலளித்தனர்.

மன்னா! அறக்கடவுள் எங்கிருக்கின்றாரோ அங்கு தான் நாங்கள் இருக்க முடியும். அறம் – தருமம் இல்லாத இடத்தில் எங்களுக்கு இடமே இல்லை.

ஆதலால் அறக்கடவுள் இருக்கின்ற உன் அரண்மனைக்கு திரும்பி வந்துவிட்டோம் என்றனர். இந்தக் கதையின் உட்பொருளை உணர்ந்து ஒரு கணம் சிந்திப்போம். அறத்தை – தருமத்தை எங்கள் மண்ணில் நிலைநாட்ட பாடுபடுவோம்.

இதுவே எங்கள் இனத்தின் மீள் எழுச்சிக்கான ஆயுதம். மறந்து விடாதீர்கள்.

# மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக யாழ். பல்கலையில் இன்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராக யாழ். பல்கலைக்கழகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று இடம் பெறவுள்ளது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் காரணமாக யாழ்.பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் எவையும் இன்று முழுவதும் நடைபெற மாட்டாது என யாழ்.பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் தெரிவித்தார்.

மு.ப 11 மணியளவில் இருந்து மதியம் 12 மணிவரை இடம் பெறும் மின்சார கட்டணத்திற்கு எதிரான இவ் ஆர்ப்பாட்டத்திற்கு யாழ்பல்கலைக்கழகத்தின் அனைத்து தொழிற்சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், ஊழியர் சங்கங்கள் என்பனவும் ஆதரவளித்துள்ளன.

அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும் நடைபெறும் இவ் போராட்டத்திற்கு பல்கலைக்கழக கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை இன்றையதினம் யாழ். பல்கலையில் நடைபெறவுள்ள பரீட்சைகள்யாவும் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் விஞ்ஞானபீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களில் விரிவுரைகள் இடம் பெறும் எனவும் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார். (எ-4)

# தமிழ் பேசும் உப தபாலதிபர்கள் சங்கத்தின் 42ஆவது வருடாந்த பொதுக் கூட்டம்

## சனி அன்று யாழில்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் பேசும் உப தபால் அதிபர்கள் தொழிற்சங்கத்தின் 42 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் ந.இரட்ணசிங்கம் கலந்து கொள்கிறார்.

இதில் நிரந்தரமாக்கப்படாதுள்ள உபதபாலதிபர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக ஆராயப்படுவதுடன் புதிய நிர்வாக சபைகளும் தெரிவுசெய்யப்படவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் வடக்கு.கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்பேசும் உபதபாலதிபர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இப்பொதுக்கூட்டத்துக்கு வருகை தரவுள்ளவர்கள் தங்களது வரவை இன்று 21 ஆம் திகதி தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய ஒருவரில் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் உபதபாலதிபர்களுக்கு தங்குமிடவசதிகளும், அனைத்து உபதபாலதிபர்களுக்கும் பிரயாணப்படியும் வழங்கப் படவுள்ளது. (எ)

# 33 ஆயிரத்து 84 பேருக்கு சிவப்பு நோட்டீஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் மின் பாவனைக்குரிய நிலுவைக் கட்டணம் செலுத்தத் தவறியுள்ள 33 ஆயிரத்து 84 மின் பாவனையாளர்களுக்கு சிவப்பு நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை சபையின் யாழ் பொறியியலாளர் ச.ஞானகணேசன் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் கடந்த பெப்ரவரி மாதத்தில் மட்டும் 500 ரூபாவுக்கு மேற்பட்ட நிலுவைக் கட்டணம் செலுத்தத் தவறிய 33 ஆயிரத்து 84 மின் பாவனையாளர்களுக்கே இந்த நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலுவைக்கட்டணம் தொடர்பில் 2 மாதங்களுக்கு ஒரு முறை பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையில் மின் பாவனைக்குரிய நிலுவைக் கட்டணம் செலுத்த தவறியுள்ளவர்களுக்கே இவ்வாறு சிவப்பு நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# சுயதொழில் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து மாற்றாற்றல் உடையோருக்கான சுயதொழில் உதவி கோரி மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்தவர்களில் முதல் மூன்று பயனாளிகளின் பெயர்களை தென்மராட்சிப் பிரதேச செயலகம் வெளியிட்டுள்ளது.

பயனாளிகளின் பெயர் விபரம் வருமாறு,

அரசரத்தினம்ரவிச்சந்திரன்(நுணாவில் மேற்கு), கதிர்வேலு ரவிச்சந்திரன் (தவசிகுளம் மிருசுவில்), பொன்னன் செல்வராசா (மீசாலை மேற்கு) இவர்களை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் விருத்திக்காக இதில் ஒருவருக்கு தையல் இயந்திரமும் இருவருக்கு கால்நடைகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-29)

# ஜோதிலிங்க தரிசனம் வற்றாப்பளையில்

(கிளிநொச்சி)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் சிறப்பு நிகழ்வாக பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்க தரிசன நிகழ்வு பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வானது கண்ணகி அம்மன் ஆலய நுழைவாயிலின் அருகே எதிர்வரும் 25 ஆம், 26ஆம் திகதியும் காலை 8மணி முதல் மாலை 8 மணிவரையும் நடைபெறவுள்ளது டன் இரண்டாம் நாள் நிகழ்வு 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிவரையும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் ஆத்மா, பர மாத்மா பற்றிய நாடகமும் ஆன்மீகப் படவிளக்கக் கண்காட்சியுடன் தியான அனுபவமும் வழங்கப்படவுள்ளதாக இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் அறிவித்துள்ளது. (அ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஒரு நிமிடம்கூட ஓயாதீர்கள்



✦ எப்போதும் விரிந்து மலர்ந்துகொண்டே இருப்பதுதான் வாழ்க்கை. யாருக்கும் பயனில்லாமல் சுருங்கி விடுவதுதான் மரணம்.

✦ தோல்வியின் மூலம் நாம் புத்திசாலிகள் ஆகிறோம். அதனால் எத்தனை முறை தோற்றாலும் குறிக்கோளை அடைவதற்கான முயற்சியை கைவிட்டுவிடாதீர்கள்.

✦ ஒரு நிமிடம் கூட ஓயாமல் ஏதாவது ஒரு பணியைச் செய்து கொண்டே இருங்கள். அது தவறோ சரியோ எதுவாக இருந்தாலும் பொருட்படுத்தவேண்டாம்.

✦ நமது அக வாழ்க்கை சிறந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டுமே நாம் காணும் உலகமும் சிறப்பும் தூய்மையும் கொண்டதாக இருக்கும்.

✦ சண்டையிடுவதோ குறைசொல்வதோ தேவையில்லை. நிலைமையைச் சீர்படுத்தி அமைக்க அவை சிறிதும் உதவப்போவதில்லை.

✦ நாம் எண்ணும் ஒவ்வொரு எண்ணமும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்பு சூட்சும தன்மையை அடைந்து நம்மிடமே வந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊடகவியலாளர்களை வசைபாடிய விவகாரம்;

# ஆஸி.கிரிக்கெட் சபை வோணரிடம் விசாரணை

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான டேவிட் வோணர் சமூக வலைத் தளமான டுவிட்டரில் அவுஸ்தி ரேலியாவை சேர்ந்த ஊடகவிய லாளர்கள் இருவரை வசைபாடி இருந்தார். இது அவுஸ்திரேலிய பத்திரிகைகளில் செய்தியாக வெளி யானதால் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த சம்பவம் குறித்து அவுஸ் திரேலிய கிரிக்கெட் சபை விசா ரணை நடத்தி வருகிறது.

டேவிட் வோணரிடம் தொடர்பு கொண்டு முழுமையாக விசா ரணை நடத்திய பின் கருத்து தெரி விப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. டுவிட்டரில் வோணரின் பதிவு பகுதியில் வேறு யாரும் நுழைந்து இப்படி திட்டி தீர்த்து இருப்பார்களோ? என்ற சந்தேகமும் நிலவுகிறது.

# சூதாட்டத்தை பதிவுசெய்த பொலிஸ் அதிகாரி மர்ம மரணம்

ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளில் சூதாட்டம் நடைபெறுவதாக முறைப்பாடு பதிவு செய்த டில்லி பொலிஸ் ஆய்வாளர் பத்ரிஷ் தத்தும், அவரது மனைவி யும் மர்மமான முறையில் மரணமடைந்தனர்.

துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிந்துள்ள இருவரின் உடல்களில் துப் பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருக்கின்றன. அதுவும், ஐபிஎல் சூதாட்டம் பற்றி புகார் செய்யப்பட்ட மே 9ஆம் திகதிக்கு அடுத்த நாளே இவர்கள் உயிரிழந் துள்ளனர்.


முன்னதாக இவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் பல திடுக்கிடும் விடயங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 4 தரகர்களுடன் தொடர்பு

சூதாட்டத்தில் சிக்கி கைதான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரர் அஜித் சண்டிலா பற்றி தினசரி புதிய தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளது.

டில்லி பொலிஸ் விசாரணையில் அஜித் சண்டிலாவுக்கு 4 சூதாட்ட தரகர்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது தெரியவந்தது. ஒரே ஆட்டத்துக்கு அவர் 4 சூதாட்ட தர கர்களை தொடர்பு வைத்துக் கொண்டு சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

மேலும் சண்டிலா விளையாடும் ஆட்டத்தில் பெரும்பாலும் சூதாட்டம் நடைபெற்றிருப்பதும் தெரியவந்துள் ளது. மற்ற வீரர்களை சூதாட்டத்தில் ஈடுபட இவர் இடைத்தரகராக செயற் பட்டிருக்கிறார்.



அங்கீத் சவான் சூதாட்டத்தில் ஈடுபட இவரது பங்களிப்பு இருந்துள் ளது. கடந்த ஐ.பி.எல். போட்டியி லேயே சண்டிலா அமித்சிங்குடன் இணைந்து சில ஆட்டங்களில் சூதாட டத்தில் ஈடுபட்டுள்ளார். சூதாட்ட தரகராக கைதாகியுள்ள அமித் சிங் ராஜஸ்தான் அணியின் முன்னாள் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

லா லிகா காற்பந்து தொடரில்

# பார்சிலோனா சம்பியன்




லா லிகா கால்பந்து தொடரில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வென்றது.

ஸ்பெயினின் பல்வேறு பகுதி யில் லா லிகா காற்பந்து தொடர் நடைபெற்றது இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, ரியல் வல்லாடாயிட் அணிகள் மோதின.

போட்டியின் முதல் பாதியில் பார்சிலோனா அணிக்கு பெட்ரோ (21ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித் தார், பின் ரியல் வல்லாடாயிட் அணி யின் மார்க் (42) "சேம் சைடு" கோல் அடிக்க பார்சிலோனா அணி முன் னிலை பெற்றது.

பின் இரண்டாவது பாதியில் ரியல் வல்லடாயிட் அணிக்கு விக்டர் (89) "பெனால்டி" வாய்ப்பில் ஒரு கோல அடித்தார். இதற்கு பார்சிலோனா அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் இத் தொடரில் பார்சிலோனா 22வது முறையாக சம்பியன் பட்டத்தை வென றது.

பிற போட்டிகளில் ரேயோ வலே கெனோ, அத்லெடிக் பில்பாவோ ஆகிய அணிகள் வெற்றி பெற்றன.

# கைது படலம் தொடர்கிறது

கிரிக்கெட் சூதாட்டத்தில் கைதாகி யுள்ள தரகர்களுக்கு ஏராளமான உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் முக வர்களாக செயற்பட்டது அம்பலமாகி யுள்ளது. கிரிக்கெட் சூதாட்ட புகாரை அடுத்து நாடு முழுவதும் தேடுதல் வேட்டையை தீவிரபடுத்தியுள்ள பொலிசார் தொடர்ந்து கைது நடவ டிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மகாராஷ்டிரா மாநிலம் அவ் ரங்காபாத்தில் நடத்திய சோதனை யில் ரஞ்சி கிண்ணத்தில் ஆடிய மனிஷ் உதை உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக டில்லி பொலி சார் தெரிவித்துள்ளனர்.

ரயில்வே அணிக்காக விளை யாடிய பாபு ராவ் யாதவ் உள்ளிட்ட மேலும் பல உள்ளூர் வீரர்கள் தரகர் களின் முகவர்களாக செயற்பட்டுள் ளது தெரியவந்துள்ளதால் அவர் களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதேபோல் பஞ்சாப் மாநிலம் ஜல் லண்தரில் நடத்தப்பட்ட சோதனை யில் சூதாட்ட தரகர் இருவர் கைது செய யப்பட்டுள்ளனர். தமிழகத்திலும் சூதாட்ட கும்பலை பிடிக்க தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தியுள்ள பொலிசார் கோவை, திருப்பூரைச் சேர்ந்த 4 தரகர்களை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# சூதாட்டத்தை தடுக்க புதிய சட்டம்

ரசிகர்களின் பேராதரவைப் பெற் றுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி, இப்போது சூதாட்ட சர்ச்சையில் சிக்கி தவிக்கிறது. அதுவும் டெஸ்ட் கிரிக் கெட் வீரராக இருந்த ஸ்ரீசாந்த் உள் ளிட்ட 3 வீரர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்டங்களில் சூதாட்டப்பேரத்தில் இலட்சக்கணக்கான பணம் பரிமாறப பட்டுள்ளது.

இதுபற்றி முதற்கட்டமாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங்குடன், சட்டத்துறை அமைச்சர் கபில்சிபல் முக்கிய ஆலோ சனை நடத்தினார். இது தொடர்பாக ஊடகவியலாளரின் கேள்விக்கு பதில் அளித்த கபில்சிபல், "விளை யாட்டுத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங்குடன் நான் பேசினேன்.

சூதாட்டம் தொடர்பாக ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்படும். இது தொடர்பான வரைவை விரைவில் தயாரிப்போம். சூதாட்டம் தொடர்பாக மிகப்பெரிய சர்ச்சை எழுந்தநிலை யிலும், மக்கள் அதை தூக்கி அடித்து விட்டு விளையாட்டின் மீது நம் பிக்கையை வெளிப்படுத்தியுள்ள னர்" என கூறினார்.

இதற்கிடையே இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டு சபையும், தகவல் அறியும் உரிமைச்சட்ட வரம்பின்கீழ் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய வீட்டு வச தித்துறை அமைச்சர் அஜய் மக்கான் வலியுறுத்தி உள்ளார்.

இதுபற்றி அவர் குறிப்பிடுகை யில், "தகவல் அறியும் உரிமைச்சட்ட வரம்பினுள் வருவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஒத்துக் கொள்ள வேண்டும். தேசிய அளவி லான அணியை தேர்வு செய்கிற முக்கிய பொறுப்பு ஒப்படைக்கப்பட் டுள்ள ஒரு அமைப்பு, தனிப்பட்ட அங்கம் என்று கூறிக்கொள்ள முடி யாது" எனக்கூறினார்.

இவர் சமீப காலம்வரை மத்திய விளையாட்டுத் துறை மந்திரி பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக் கது.




# மன்னிப்பு கேட்டார் ஸ்ரீசாந்தின் தந்தை

அணித்தலைவர் டோனி மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் குறித்துத் தவறாகப் பேசியதற்காக ஸ்ரீசாந்தின் தந்தை சாந்தகுமாரன் நாயர் மன்னிப்பு கேட்டுள்ளார்.

டோனியும், ஹர்பஜனும் சேர்ந்து எனது மகனின் கிரிக்கெட் வாழ்க்கையை அழிக்கப் பார்க்கின்றனர் என்று குற்றம்சாட்டியிருந்தார் ஸ்ரீசாந்தின் தந்தை சாந்தகுமாரன் நாயர்.

தற்போது தனது பேச்சுக்காக அவர் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், எனது மகன் கைது செய்யப்பட்டதைக் கேட்டதும் எனக்கு எதுவும் ஓடவில்லை. அந்த நேரத்தில் ஏற்பட்ட பதட்டத்தில் டோனி, ஹர்பஜன் குறித்துப் பேசி விட்டேன்.

இதற்காக நான் டோனி, ஹர்பஜன் சிங்கிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்றும் கேரள மக்களும் என்னை மன்னிக்க வேண்டும் எனவும் கூறினார்.

# முதல் டெஸ்டில் இங்கிலாந்து வாகை

இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இங் கிலாந்து அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரின் முதலாவது போட்டியில் இங் கிலாந்து அணி 4 நாட்களில் இலகு வான வெற்றியைப் பெற்றுள்ளது.

லோர்ட்ஸ் மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கி லாந்து அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி ஜொனி பெயர்ஸ்ரோவின் 41 ஓட்டங்கள், ஜோ றூட்டின் 40 ஓட்டங்கள், ஜொன தன் ட்ரொட்டின் 39 ஓட்டங்கள், அலஸ்ரெயர் குக்கின் 32 ஓட்டங் கள், இயன் பெல்லின் 31 ஓட்டங்க ளின் துணையோடு 232 ஓட்டங் களைப் பெற்றது.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 4 விக்கெட்டுக் களையும், நீல் வக்னர் 3 விக்கெட் டுக்களையும், ட்ரென்ட் போல்ட் 2 விக்கெட்டுக்களையும், புரூஸ் மார்ட் டின் ஒரு விக்கெட்டையும் கைப்பற் றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 69 ஓவர்களில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 207 ஓட் டங்களை மாத்திரம் பெற்றது. அவ் வணி சார்பாக றொஸ் டெய்லர் 72 பந்துகளில் 66 ஓட்டங்களையும், கேன் வில்லியம்ஸன் 60 ஓட்டங் களையும் பெற்றனா?.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 5 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் ஃபின் 4 விக்கெட்டுக்களையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இனிங் ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பாக ஜோ றூட் 71 ஓட் டங்களையும், ஜொனதன் ட்ரொட் 56 ஓட்டங்களையும் பெற்ற போதி லும், அவ்வணி 213 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.



பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 6 விக்கெட்டுக்க ளையும், கேன் வில்லியம்ஸன் 2 விக்கெட்டுக்களையும், ட்ரென்ட் போல்ட்ற, நீல் வக்னர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

239 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, ஸ்ருவேர்ட் ப்ரோடின் அற்புதமான பந்துவீச்சால் 68 ஓட்டங்களுக்கே ஆட்டமிழந்து 170 ஓட்டங்களால் தோல்விய டைந்தது. அவ்வணி சார்பாக எந்த வொரு வீரரும் 20 ஓட்டங்களைப் பெற் றிருக்கவில்லை.

பந்துவீச்சில் ஸ்ருவேர்ட் ப்ரோட் 7 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இங்கிலாந்தின் ஸ்ருவேர்ட் ப்ரோட் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் கிரிக்கெட் இறுதிப்போட்டி நெற்கொழு கழுகு சம்பியன்






மகளிருக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியில் அரியாலை ஸ்ரீ கலைமகள் அணியை 15 ஓட்டங்களினால் வெற்றிபெற்று நெற்கொழு கழுகுஅணிசம்பியனாகியுள்ளது.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் வட மாகாண ரீதியாக நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம்நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழகத்தில்நடைபெற்றது.

இவ் இறுதியாட்டத்தில் அரியாலை ஸ்ரீ கலைமகள் அணியை எதிர்த்து நெற்கொழு கழுகு அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கழுகு அணி 5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ் வணி சார்பில் மாலினி 15, மேரி கொல்டா, தர்சி, சுகிர்தா ஆகியோர் தலா 06 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஸ்ரீ கலைமகள் அணி சார்பாக பந்துவீச்சில் சுபர்ணா 2 விக்கெட்டுக்களையும், யாழினி, நிலஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

40 ஓட்டங்களினை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ கலைமகள் அணி 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 25 ஓட்டங்களையே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ் வணி சார்பாக சுபர்ணா 10, கௌதமி 08, யாழினி 04 ஓட்டங்களை எடுத்தனர்.

கழுகு அணியின் பந்து வீச்சில் சுகிர்தா, மாலினி, தர்சி, அஜித்தா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். மூன்றாம் இடத்தை ஓமந்தை மத்திய கல்லூரி அணி கைப்பற்றியது. (24)

## யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட முடிபுகள்

யாழ். மாவட்ட 15, 19 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான மேசைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

15 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகியதுடன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி இரண்டாமிடத்தினையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பினாகியதுடன், இரண்டாமிடத்தினை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தினை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சம்பியனாகியதுடன், தொடர்ந்து இரண்டாம் மூன்றாமிடங்களை முறையே யாழ்ப்பாணம் இந்து கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிகள் பெற்றுக் கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பினாகியதுடன், இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி, கொக்குவில் இந்து கல்லூரி அணிகள் பெற்றுக்கொண்டன.

## யாழ். மாவட்ட உடற்பயிற்சி போட்டி சென். அன்டனிஸ், சென்.ஹென்றிஸ் சம்பியன்

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட உடற்பயிற்சி அணிகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டிகள் நேற்று யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்டனீஸ்அணி முதலிடத்தையும், இரண்டாமிடத்தினை இளவாலை சென். ஹென்றிஸ் அணியும், மூன்றாமிடத்தினை பருததித்துறை சித்தி விநாயகர் அணியும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி முதலிடத்தையும், இரண்டாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தினை வேம்படி மகளிா உயர்தரப் பாடசாலை அணியும் பெற்றுக்கொண்டன.

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்.மாவட்ட பிரதேச செலயகங்களின் வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் இப்போட்டிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இப்போட்டியில், தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகியதுடன் இரண்டாமிடத்தினை சங்கானைப் பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

## பெண்ணை தள்ளி விழுத்திவிட்டு கைப்பையை அபகரித்த திருடர்கள்

### சுன்னாகத்தில் சம்பவம்

(மிருசுவில்)

வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை தள்ளி விழுத்திவிட்டு அவர் மீது சரமாரியாக தாக்குதல் நடத்திய திருடர்கள் அவரின் கைப்பையையும் அபகரித்துச் சென்றுள்ளனர். இச் சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் சுன்னாகம் வடலி அம்மன் கோயில் வளைவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இரு திருடர்களில் ஒருவர் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி அப் பெண்ணின் கைப்பையை அபகரித்துள்ளார்.

எனினும் அப் பெண் கைப்பையை விட்டுக் கொடுக்க மறுக்க தள்ளி விழுத்தி விட்டு அவர் மீது தாக்குதல் நடத்தி நிலைகுலைய செய்துவிட்டு கைப்பையை அபகரித்து சென்றுள்ளார்.

ஏற்கெனவே மற்றைய திருடன் மோட்டார் சைக்கிளை தயார் நிலையில் வைத்திருந்த நிலையில் இருவரும் தப்பிச் சென்றுள்ளனர். அதே இடத்தினை சேர்ந்த வி.இந்திராதேவி (வயது 43) என்பவரது கைப்பையே அபகரிக்கப்பட்டது ஆகும்.

இதில் 45 ஆயிரம் ரூபாய் பணமும் பெறுமதியான கைத்தொலைபேசியும் தேசிய அடையாள அட்டையும் இருந்துள்ளது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-11,85)

## ரோம் மாஸ்டர்ஸ் டெனிஸ்: ரபேல் நடால் சம்பியன்

இத்தாலி தலைநகர் ரோமில் நடந்த ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடாலும், சுவிஸ் வீரர் ரோஜர் பெடரரும் மோதினர்.



விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் ரபேல் நடால் 6-1, 6-3 என்ற நேர்செட்டுகளில் ரோஜர் பெடரரை வீழ்த்தினார்.

கடந்த 9 வருடங்களில் 7 முறை இந்த ரோம் மாஸ்டர்ஸ் கிண்ணத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரபேல் நடால் இதுவரை பங்குகொண்ட 56 விளையாட்டில் 24 கிண்ணங்களை வென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தலைவர்...

தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்பதில் ராஜீவ் காந்தி முனைப்பாக இருந்தார். அவருடைய காலத்தில் அஸ்ஸாம், மிசோரம், பஞ்சாப் மாநிலங்களில் தீவிரவாதம் ஒடுக்கப்பட்டது.

மேலும் இலங்கையில் தீவிரவாதத்தை ஒடுக்க அமைதிப் படையை அங்கு அனுப்பி வைத்தார். இது தவிர இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கப்பல் மூலம உணவு பொருட்களை அனுப்பி வைத்தார். அந்த உணவு பொருட்களை வாங்க இலங்கை இராணுவம் முன்வராதபோது அவற்றை விமானம் மூலம் தமிழர்களின் பகுதியில் போடச் செய்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தால் நாம் அவரை இழந்தோம். தீவிரவாதத்திற்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கும் ஒரு கூட்டம் தமிழகம் மற்றும் புதுவையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அண்மையில் திரைப்பட இயக்குநர் சீமான் கடலூரில் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கோரினார். தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் புகைப்படத்தை பிரசுரித்து கூட்டம் நடத்த அவர் அனுமதி கோரினார். அந்த கூட்டத்திற்கு தமிழக அரசு தடை விதித்தது. அரசின் செயல் நியாயமானது.

விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரன் ஒரு மாவீரன் என்கின்றனர். அப்பாவி மக்களை போரில் கேடயமாக பயன்படுத்தியவர் ஒரு வீரனா?

ராஜீவ் காந்தி இலங்கைக்கு சென்றபோது இராணுவ வீரரால் தாக்கப்பட்டார். அந்த தாக்குதலில் இருந்து அவர் உயிர் தப்பினார். வெற்றியோ, தோல்வியோ போரை முன்நின்று நடத்துபவர தான் வீரன். பதுங்கிக் கொண்டவர்கள் அல்ல.

- சீமான் தன்னுடைய கூட்டத்தில் காஷ்மீர் தீவிரவாதி யாசின் மாலிக்கை அழைத்து வந்து பேச வைத்துள்ளார்.

பலமுறை சிறைக்கு சென்ற சீமான் மீண்டும் சிறைக்கு செல்ல விரும்புகிறார். தமிழக அரசின் வழக்குக்கு பிறகு அவர் தலைமறைவாகி விட்டார். அவரை கைது செய்து 10 ஆண்டுகள் சிறையில் வைக்க வேண்டும் என்றார். (எ-11)

# த.தே.ம.முவின்...

ஆகியோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலை 8.50 மணி முதல் மாலை 3 மணி வரை விசாரணைகள் இடம்பெற்றதாகவும் இதன்போது வவனியாவில் முள்ளிவாய்க்கால நினைவு தினம் தமது கட்சியால் நினைவு கூருவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் சமனாங்குளத்தில் அமைந்துள்ள தூபியில் நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான காரணம் பற்றியும் கேட்டறியப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த 18ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் சி.கஜேந்திரன, தேசிய அமைப்பாளர் ஆகியோர் உட்பட 15 பேர் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11,266)

# புனர்வாழ்வு...

பூந்தோட்டம், வெலிகந்த - சேனபுர மற்றும்கந்தக்காடு போன்ற 3 புனர்வாழ்வு முகாம்களில் தங்கவைக்கப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின்போது பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடைந்த மற்றும பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்ட 12,165 முன்னாள் போராளிகளுக்கு நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்ட 24 புனர்வாழ்வு நிலையங்களில் புனர் வாழ்வு அளிக்கப்பட்டு வந்தது.

இவ்வாறு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு தொழிற்பயிற்சிகளை நிறைவு செய்தவர்கள் கட்டம் கட்டமாக அவர்களது உறவினர்களிடம ஒப்படைக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினர்.

புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்த முன்னாள் போராளிகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து எஞ்சியுள்ள 340 பேர் 4 புனர்வாழ்வு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர்.

இந்நிலையில், இவர்களை நிர்வகிப்பதில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக மருதமடு புனர்வாழ்வு முகாம் மூடப்பட்டு அதிலிருந்த 100 பேரும் ஏனைய 3 முகாம்களுக்கும் மாற்றப்பட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, வவுனியா- பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் முன்னாள் பெண் போராளிகள 17பேர் உட்பட 122பேர், சேனபுர முகாமில் 119 பேரும், கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் 99 பேரும் என 340 பேர் தொடர்ந்தும் புனர் வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பிரிகேடியர் கூறினார். (எ-11)

# தமிழ் கூட்டமை...

யினரும் கைச்சாத்திட்ட பின்னர் தமிழருக்கான தீர்வு விடயம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதில் ஒன்றாகச் சேர்ந்து செயற்படுவர். அத்துடன், காலப்போக்கில் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதியும் விடயத்திலும் 5 கட்சியினரும் ஒன்றாகச் சேர்ந்து முடிபெடுப்பர் எனத் தெரியவருகின்றது. (எ-11)

# சர்வமதக் குழு...

சந்தித்து தமது பயணம் குறித்து விளக்கமளித்துள்ளது.

இந்தியாவிலுள்ள கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காகவே கர்தினால்மல்கம் ரஞ்சித்துடன் இந்தக் குழு பேச்சு நடத்தியுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

தமிழகத்துக்கு விஜயம் செய்யும் இலங்கையின் சர்வமத நல்லிணக்கக் குழுவினர் அங்குள்ள சர்வ மதத் தலைவர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

தமிழகத்துக்குச் செல்லும் இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்படுகின்றமை, இலங்கையர்களுக்கு எதிரான வன்முறைகள், இவற்றால் இரு தரப்புகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள மனக் கசப்புகள் உட் படப் பல விடயங்கள் சம்பநதமாக இந்தியத் தரப்புடன் இலங்கைக் குழு பேச்சு நடத்தவுள்ளதுடன், பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்படவுள்ளன.

அத்துடன், தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக தமிழக மீனவர் சமுதாய ஆலோசகர் என்.அந்தோனி தலைமையிலான குழுவினருடன் இலங்கைக குழு கலந்துரையாடவுள்ளது. (எ-11)

# சீரற்ற கால...

மத்திய, ஊவா மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்கள் பாதிக்கப்படும் வாய்ப்புக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி சன்ன ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (எ-11)

# புலிகளின் வீழ்ச்சிக்கு ...

இராணுவமும், விடுதலைப் புலிகளும் செய்ததாகக் குற்றம் சாட்டப்படும் போர்க்குற்றங்களை விசாரிக்கவோ சட்ட நடவடிக்கை எடுக்கவோ அர்த்தமுள்ள நடவடிக்கை ஒன்றையும் இதுவரையில் எடுக்கவில்லை என மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள் ளது.

மனித உரிமை ஆர்வலர்கள், சுயாதீன ஊடகவியலாளர்கள் போன்றவர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. அத்துடன், தமிழ் மக்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வது குறித்து அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

போர்க்குற்றங்களை எத்தரப்பு செய்திருந்தாலும் அது விசாரிக்கப்படும் என ஐநா தலைமைச செயலாளருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியிருந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு பொறுப்புகூறல் தொடர்பில் செய்த பரிந்துரைகளும் கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிகாட்டியுள்ளது.

இதேவேளை, துஷ்பிரயோகங்களை எதிர்கொண்டவர்கள் நீதியை எதிர்பார்த்தும், காணாமல்போனவர்களின் நிலை தொடர்பான தகவலை எதிர்பார்த்தும், தமது அடிப்படை மனித உரிமைக்கு சிறிதளவு மரியாதையை எதிர்பார்த்தும் ஏங்கி நிற்கிறார்கள். ஆனால் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமோ அதில் ஒன்றையும் நிறைவேற்றிக் கொடுக்காமல் அவர்கள் மீது மேலும் அடக்கு முறையை கட்டவிழ்த்து வருகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகம்அமைப்பின்ஆசிய விவகார இயக்குநர் பிராட் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார்.

பரந்துபட்ட அடக்கு முறையால் மக்களின் அடிப்படை சுதந்திரங் களை தொடர்ந்தும் மறுத்து வரலாம் எனும் விதமாக இலங்கை அரசு செயல்படுகிறது. ஆனால் யுத்தகாலத்திலேயே பல கஷ்டங்களுக்கு இடையில் உண்மையை வெளிக் கொண்டு வந்த ஆர்வலர் கள் இனியும்கூட உண்மையை வெளிக் கொண்டுவர நிச்சயம் வழிதேடுவார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-11)


Workroom Based Practical...

SPOKEN ENGLISH

100% கதைத்தல் பயிற்சி
Video & Audio தொழில்நுட்ப முறை
1st class free

Special class can be arranged for Doctors, Engineers, managers, accountant etc.

- பிரபல்யமான கொழும்பு (British Council Special) ஆசிரியர் குழாமின் வழிகாட்டல்.
- விசேட தனிப்பட்ட கவனம்.
- சிறியவர் முதல் உயர் அலுவலர்கள் வரை தனித்தனி வகுப்புகள்.

விரும்பிய நேரம்
CALL 0777 444 225
(C-3386)

IiSEEES NALLUR CAMPUS
762, Point pedro Road, Nallur. 0212224728

பணியாளர்கள் தேவை

1) பொது முகாமையாளர்
2) நிர்வாக அலுவலர்

கிளிநொச்சியில் சமூக நல நோக்குடன் இயங்கி வருகின்ற அரிசி மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற நிறுவனமொன்று மேற்படி 2 பணிநிலைகளுக்குமான பொருத்தமான திறமை, அறிவு,அனுபவம் மற்றும் அர்ப்பணிப்பு மிக்க இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்களை 05.06.2013 இற்கு முன்பாக வேண்டி நிற்கின்றது. தகுதியுடைய பெண்கள் முன்னுரிமை பெறுவர்.

விண்ணப்ப முகவரி:
அருணன், 6, ஸ்ரீ குணானந்த மாவத்தை, தேக்கவத்தை, வவுனியா.
email: arunanecs@gmail.com விபரங்களுக்கு: 0771435887
(2693)

க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடையாவிட்டாலும்
மலேசிய SEGi பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்று
LONDON பல்கலைக்கழகச் சான்றிதழுடன்
மாதம் 50,000/- வருமானமும் தரும்
ஹொட்டேல் பயிற்சிநெறி

- பயிற்சிநெறி முடிவில் வேலைவாய்ப்பும், Singapore, Australia மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பும்.
- இலவச 3 மாத ஆங்கில வகுப்பு

3ம் அணி மாணவர்கள் மே 21இல் பயணம்
4ம் அணி விரைவில் பயணம்
5ம் அணியில் இணைந்துகொள்ள உடனே அழையுங்கள்

சிகரம் SIKARAM
MEDIA & EDUCATION
கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com
இணையம்:www.sikaram.lk

உங்கள் அன்பு உறவுகளுக்கு ... !
www.creativedesk.lk/shop
மேலதிக விபரங்களுக்கு :-
077 777 8529
(2610)

வேலைவாய்ப்பு

யாழில் பிரபலமாக இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச கம்பனிக்கு துடிப்புமிக்க இளைஞர், யுவதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- அனுபவம் பயிற்சியின் மூலம் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் 15,000 /= வழங்கப்படும்.
- கல்வித் தகைமை: O/L
- வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளலாம்.
- Medical, EPF, ETF வசதிகள் அமைத்துத் தரப்படும்.

வயதெல்லை: 18-30
தங்குமிட உணவு வசதிகள் இலவசம் முந்தும் 20 பேருக்கு மட்டும்.
தொடர்புகளுக்கு: 0775566226, 0770771377, 0217200867
for more details: www.grantonsrilanka.com
Best of luck for your Better future
(C-3382)

வேலையாட்கள் தேவை

பிரபல நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
தகுதி: O/L சாதாரண கல்வி தகைமை
வயது எல்லை : 18 - 38
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (தங்குமிடம் இலவசம்)
தொடர்புகளுக்கு: 0774301972
(2700)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062
(C-3380)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org